
# நினைவுச் சுடர்



அமரர். சிவநெறிச் செம்மல்

**த. வ. வி. கதிராமப்போடி (வண்ணக்கர்)**

**அவர்களின்**

# 31ம் நாள் நினைவுச் சுடர்

**29 - 12 - 2006**

A.karunakaran

# சமர்ப்பணம்

நூல் வெளியீடு :

## ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபை

கொக்கட்டிச்சோலை
29.12.2006

உ
சிவமயம்

மட்டக்களப்பு அரசடித்தீவைச் சேர்ந்த
அமரர். சிவநெறிச் செம்மல்

# த. வ. வி. கதிராமப்போடி (வண்ணக்கர்)

அவர்கள் சிவபதம் அடைந்த

# 31ம் நாள் நினைவு



## 29.12.2006

தோற்றம் :
04 - 10 - 1911

மறைவு :
29 - 11 - 2006

# பஞ்ச புராணம்

## தேவாரம்

பேராயிரம் பரவி வானோரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்று
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித்
தீராதநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத் திண்சிலை கைக்கொண்ட
போரானை புள்ளிருக்கும் வேளூரானை
போற்றாதே ஆற்றநாள் போகின்றேனே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனை
திரு வீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டு உள்ளம்
குளிர என் கண்கள் குளிர்ந்தனவே.

## திருப்பலாண்டு

நிட்டை இலாஉடல் நீத்து என்னை ஆண்ட
நிகர் இல்லா வண்ணங்களும்
சிட்டன் சிவன் அடியாரைச் சீராட்டுந்
திறங்களுமே சிந்தித்து
அட்டமூர்த்திக்கு என்அகம் நெகஊறும்
அமிர்தினுக்கு ஆலநிழல்
பட்டனுக்கு என்னைத் தன்பால் படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்தமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே.

# தான்தோன்றுமீசுரர் பதிகம்

க.உ.சின்னவப் புலவர் - செட்டிபாளையம்

**(29.1.50ல் பாடப்பட்டது)**

கைலாசம் உறைந்துமணிமேடை மீதில்
காரிகையோடமர்ந்திருக்கும் காலகாலன்
அகிலாண்டமான சிவஒளியாய் நின்றாய்
அரகரா எனும் நாமமான மூர்த்தி
பகலுகின்ற முனிஇருஷி தேவர் சூழப்
பக்கமதில் கணநாதர் மகிழ்ந்து போற்ற
தலமேவு கொக்கட்டிச்சோலை வாழும்
தற்பரனே தான்தோன்றும் ஈசா போற்றி

கானகத்தில் வாழ்கின்ற வேடனான
கண்ணப்பனார் தனக்கு கண்ணை யீந்தாய்
மாநகரில் மாணிக்கவாசகற்கு
வன நரியை வாகனமாகச் செய்தாய்
மாடேறும் ஆசனாய் பேரெடுத்து
மார்க்கண்டன் தனக்கு வரமும் ஈந்தே
சீரேறு கொக்கட்டிச்சோலை வந்தேன்
செல்வமே தான்தோன்றும் தேவா போற்றி

கிருபைவைத்து உமையவளை யிடமேவைத்து
கெங்கைதனை தலையில் வைத்தரவம் பூண்டு
அருள்மேவும் கொன்றைமலர் மாலை ஆட
அம்பலத்தில் அசைந்தசைந்து ஆடும்தேவே
பெருமைபெற்ற அசுரர்களை அழிக்கவேண்டி
பிள்ளையெனும் வேலவரை ஏவிவிட்டாய்
அருள்மேவும் கொக்கட்டிச்சோலை வாழும்
அப்பனே தான்தோன்றும் தேவா போற்றி

கீழோகம் மேலோகம் எல்லாம் நீயே
கேட்டவரம் யாவருக்கும் கொடுப்பாய் நீயே
சாலோக சாயூசியம் அளிப்பாய் நீயே
தாங்கொணா வறுமை துயர் தீர்ப்பாய் நீயே
நாள்தோறும் உன்கோயில் பழிபடுத்து
நல்லவரம் பெற்றதனால் நாங்கள்தாமும்
தாள்வில்லா கொக்கட்டிச்சோலை வாழும்
சங்கரா தான்தோன்றும் ஈசாபோற்றி

குஞ்சரனை ஈன்றெடுத்தாய் உலகோர் போற்ற
குமரனையும் பயின்றமரா் பகையைத் தீா்த்தாய்
கஞ்சனைக் கொன்றோன் உனைத்தேடிக்
காணவொண்ணாப் பரஞ்சோதியாகி நின்றாய்
செஞ்சரணம் பணியன்பா் முத்தா் முன்பு
ரிஷி முன்பும் தோன்றிய அருளைக்காட்டி
தஞ்சமென்று கொக்கட்டிச்சோலை வந்தேன்
தற்பரனே தான்தோன்றும் ஈசாபோற்றி

கூரிய வேலாயுதனாா் வனத்தில் சென்று
குறமாதை தனக்குறவாக்கிக் கொண்டு
வீரியத்தோடேகி வைகை அடைக்கவேபோய்
மீனவன் கை அடிபட்ட வெட்கத்தாலே
பாரியதோா் வில்லதனால் அடிபட்டேங்கி
பாசுபதம் ஈந்தனையோ பாா்த்தனுக்கு
காரியமாய் கொக்கட்டிச்சோலை வந்தேன்
கடவுளே தான்தோன்றும் ஈசாபோற்றி

கெங்கைதும்பை மணிபூண்டு மதனைச் சுட்டாய்
கொக்கரித்தாய் முப்புரத்தை தகனம் செய்தாய்
பங்கமுறு சமணரை வெற்றி கொண்டாய்
பகருகின்ற சுந்தரருக்கு அருளே செய்தாய்
எங்கெங்கும் பரந்த ஒளியாகி நின்றாய்
இடா் அகற்றி அடியாா்க்கு இரங்கும் தேவே
தங்குகின்ற கொக்கட்டிச்சோலை வந்தேன்
தற்பரா தான்தோன்றும் ஈசாபோற்றி

கேட்டவரம் கொடுப்பதற்கு நீயிருக்க
கிட்டவந்து பெறுவதற்கு நானிருக்க
வாட்டமுடன் கொக்கட்டிச்சோலை தன்னில்
மாதேவா உன் சந்நிதியை வலமாய் வந்து
பாா்த்தபொழு துமையோடு நீயிருக்க
பக்கமெலாம் ஆலாத்தி ஏந்திநிற்க
காத்திருந்து கொக்கட்டிச்சோலை வந்தேன்
கடவுளே தான்தோன்றும் ஈசாபோற்றி

கைதனிலே சூலமொடு மானைக்கண்டேன்
கருணைபுரி மூன்று திருக்கண்ணைக் கண்டேன்
மெய்யிலே திருநீற்று ஒளியைக் கண்டேன்
வெண்புலித்தோல் உடைகண்டேன் மேனிகண்டேன்
பையரவும் சடைமுடிமேல் மாலைக்கண்டேன்
உன்பதிவந்து போற்றும் அடியார்கள் கண்டேன்
உய்யவந்தேன் கொக்கட்டிச்சோலை தன்னில்
உத்தமனே தான்தோன்றும் ஈசாபோற்றி

கொடிகண்டேன் முடிகண்டேன் கோவில் கண்டேன்
குலவுதிருக் கோபுரத்தின் அழகைக் கண்டேன்
படியேறி மணி மதில் சூழ் வீதிகண்டேன்
பக்கமெலாம் அமர்ந்திருக்கும் கோவில் கண்டேன்
வடிவுடைய சித்திரத்தேர் மீதில் ஏறி
மங்கை சிவகாமியுடன் வரவும் கண்டேன்
கருதரிய கொக்கட்டிச்சோலை வாழும்
கடவுளே தான்தோன்றும் தேவாபோற்றி

கோடொடித்து மலைதன்னில் வரையச் சொல்லி
குஞ்சரனை ஈன்றெடுத்தாய் உலகோர் போற்ற
ஆடடித்துப் பலிகொள்ளுங் காளிதன்னை
அங்கங்கு நிறுத்திவைத்தாய் உன் அருளைக்காண
தேடரிய வீரனைக் கொன்றே
தக்கன்யாகத்தை அழிக்கச் செய்தாய்
தேடரிய பூஞ்சோலை புகுந் தொளித்தாய்
சோதியே தான்தோன்றும் ஈசாபோற்றி

கௌவை தமிழ்மொழிமாதர் குரவையார்ப்ப
கவிவாணர் புகழ் தோற்றிக் கவிகள் பாட
வைவிழிசேர் அரம்பையர்கள் நடனமாட
மாதவத்தோர் நின்று மலர் சொரிந்துபோற்ற
கைவளையலிடுமாதர் சூலமேந்தி
கவரியிருபக்கமும் அசைந்து தோற்ற
தேடரிய கொன்றை மலர் மாலை சூடும்
சிவ சிவா தான்தோன்றும் ஈசாபோற்றி

இக்கணமே உன்பதியில் வீழ்ந்து
இரவு பகல் அழுத சத்தம் கேளாதோ
தக்க சிறுத் தொண்டருக்கு மகவைக் கொன்றதினால்
மேலான பதவி தன்னைக் கவரச் செய்தாய்
எக்காலமும் பூசைதவறா வண்ணம்
இறைஞ்சும் அடியார்களுக்கு இரங்கும் தேவே
பக்குவமாய் உனைவந்து பணிந்து நின்றேன்
பராபரனே தான்தோன்றும் ஈசாபோற்றி

# ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய
# "காவடிச் சிந்து"

இயற்றியவர் - "அம்பிளாந்துறையூர் அரியன்"

அ. அப்பாவி எங்களையும் பாருமையா
அல்லலுறும் எமதினத்தைக் காருமையா
அகதிகளாய் வாழ்வதற்கு ஏன் படைத்தாய்
அடிமையுறவா எம்மை வாழ வைத்தாய்
தயங்காமல் உன்னிடத்தில் கூறுகின்றோம்
தயவுடனே எங்களையும் பார்த்திடுவாய்
தமிழ் கமழும் கொக்கட்டியூரில் வாழும்
தான்தோன்றீ ஈஸ்வரனே அருள் செய்வாயே.

ஆ. ஆண்டவனே நீயும் எமக்கிரங்கா விட்டால்
யாரிடத்தில் நாங்கள் இனிச் சென்றிடுவோம்
அல்லும் பகல் வேளையெல்லாம் அழுகின்றோமே
அகதிகளாய் நாம் இங்கு சாகின்றோமே
சொல்லியழ யாரிடமும் உதவி இல்லை
சோகம் தான் எங்களுக்கு எந்நாளும்
சோதியே தான்தோன்றீ ஈஸ்வரனே
நீதியே எங்களுக்குத் தருவாய் நீயே.

இ. இயன்றவரை நாம் இங்கு வாழ்ந்து விட்டோம்
எள்ளளவும் எமதினத்திற் குரிமை யில்லை
முயன்றவரை உங்களையே நம்பி விட்டோம்
முடிவுக்கு அருள் ஒன்று தருவாய் நீயே
விடிவுக்கு காலம்தான் இன்னும் ஏனோ
வீண்தானோ எங்கள் வினையும் தானோ
வீரர் ஊர் கொக்கட்டிச்சோலை வாழும்
வேழமுகன் தந்தையே அருள் செய்வாயே.

ஈ. ஈக்களும் இந் நாட்டில் இன்பம் காணும்
எலிகழுகு பூனைகளும் மகிழ்ச்சி கொள்ளும்
எறும்புகளும் பறவைகளும் அமைதி காணும்
குறும்பு செய்யும் குரங்குகளும் கூடி வாழும்
அன்பு கொண்ட நாங்கள் மட்டும் அடிமைதானா
அகிலத்தில் எம்மினமோ ஏனோ தானோ
அரவணைக்கும் படுவான்கரைப் பதியில் வாழும்
அருள் வீசும் சிவகுருவே ஒளி செய்வாயே.

உ. உண்மைதான் உன்னிடத்தில் சொல்லுகின்றோம்
ஒருபொழுதும் எங்களுக்கு விடிவு இல்லை
உரிமையெல்லாம் இழந்து தவிக்கின்றோமே
ஊமையாய் எந்நாளும் இருக்கின்றோமே
உடமைகளும் எங்களுக்கு இங்கு இல்லை
உள்ளதெல்லாம் பறிகொடுத்து அகதியானோம்
உழவர் ஊர் கொக்கட்டிப்பதியில் வாழும்
உமையம்மை நாயகரே அருள் செய்வாயே.

ஊ. ஊமையாய் இருப்பதற்கு ஏன் படைத்தாய்
ஊதாரி வாழ்வுதான் எமக்களித்தாய்
உள்ளமெலாம் வெறிச்சோடி உடலும் நடுங்குதே
உதவாத கொடுமையால் உயிரே வதையுதே
கள்ளமில்லா மனதாலே சொல்லுகின்றோம்
கைகூப்பி உம்மையே நாளும் வணங்குவோம்
கதிர் விளையும் படுவான்கரைப் பதியில் வாழும்
நடராஜப் பெருமானே அருள் செய்வாயே.

எ. எங்களின் தலைவிதி இப்படித்தானோ
எம்மினம் கொடுமையில் அழிவதுதானோ
இகழ்வுக்குத்தானோ நாங்கள் பிறந்தோம்
இரவுபகல் பாராமல் வதைகளால் மடிந்தோம்
இன்பமே ஒருபொழுதும் கண்டதில்லை
துன்பமே சூழ்ந்து சோகமாய்ப் போனோம்
துணிந்தவூர் கொக்கட்டிச்சோலை வாழும்
துயர் துடைக்கும் ஈஸ்வரனே அருள் செய்வாயே.

ஏ. ஏமாந்தோம் இழந்திட்டோம் எல்லாம் இங்கே
ஏராளம் மக்களையும் பறி கொடுத்தோம்
தாராள வார்த்தைகளால் கெஞ்சிக் கேட்டோம்
தயங்காமல் கூடியும் வாழ்ந்து பார்த்தோம்
தரணியிலே தலை நிமிர காலம் இல்லை
தரம் கெட்டு தமிழ் அன்னை வாடுகின்றாள்
தமிழ்கமழும் கொக்கட்டிச்சோலை வாழும்
தான்தோன்றீ நாயகனே துணை செய்வாயே.

ஐ. ஐயனே எமதினத்தைக் காத்திடையா
ஆதரித்து அன்புடனே அரவணைப்பாய்
கண்ணீரைச் சொரிவதையே நிறுத்திடுவாய்
கலங்கி வாழும் எங்களையே பார்த்திடுவாய்
கடமைகளை நாளும் செய்ய வைப்பாய்
கண்ணியமாய் நாங்கள் வாழச் செய்திடுவாயே
கல்விவளர் படுவான்கரையூர் வாழும்
கங்காதரனே கண்திறந்து அருள் செய்வாயே.

ஒ. ஒற்றுமையாய் உன்னையே வணங்குகின்றோம்
ஒருபொழுதும் உன்நினைவை இழக்க மாட்டோம்
ஒழுக்கத்தை ஒருநாளும் விடவும் மாட்டோம்
ஓங்கார மந்திரத்தை நாளும் செவிப்போம்
உறுதியுடன் உழைப்பதிலும் அலுக்க மாட்டோம்
உண்மையுடன் வாழ்வதிலும் அலுக்க மாட்டோம்
உதயவரின் ஒளி வீசும் கொக்கட்டியூரில் வாழும்
உலகாளும் ஈஸ்வரனே அருள் செய்வாயே.

ஓ. ஓடியே ஒழிப்பதற்கு இடமும் இல்லை
நாடியே ஆதரிக்க எமக்கெவரும் இல்லை
நடுவழியில் நாளெல்லாம் தவிக்கின்றோமே
நாங்கள்தான் கண்ணீரும் சொரிகின்றோமே
கொள்கைக்கு எள்ளளவும் மதிப்புமில்லை
கொடுமைதான் இந்நாட்டில் நடக்குதையா
மாடமுயர் கொக்கட்டிச்சோலை வாழும்
மறை நாத எமக்கு அருள் செய்குவாயே.

ஔ. ஔவைக்கு உபதேசம் செய்துவிட்ட
அருமையாம் உன்மகன் முருகனுமே
அழைத்திட்டு வந்தெம்மை தேற்றிடப்பா
அகிலத்தில் தலைநிமிர வைத்திடப்பா
அடிமையாம் விலங்குகளை உடைத்திடப்பா
அகதிகள் எங்களுக்கு இரங்கிடப்பா
ஆண்ட தமிழ் கொக்கட்டிச்சோலை வாழும்
அகிலாண்ட ஈஸ்வரனே அருள் செய்வாயே.

# வண்ணக்கரின் பணிகளை நினைவு கூர்வோம்

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய படையாண்டகுடி முன்னைநாள் வண்ணக்கர் த.வ.வி. கதிராமப்போடி (கொழும்பார்) அவர்கள் எமது சிறுபிள்ளை பராயமிருந்தே எமக்கு நன்றாக தெரிந்தவர். கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் வண்ணக்கராகவும், கௌரவ செயலாளராகவும் நீண்ட காலமாக கடமையாற்றி சரித்திரம் படைத்தவர். அவர் சேவைக் காலத்தில் ஆலயம் புனரமைக்கப்பட்டதுடன் கும்பாபிஷேகமும் நிறைவேறியது. இப்பணி நிறைவேறியதும் முதலாவது மகோற்சவம் நடைபெற்றபோது தேர்த்திருவிழாவின் போது சித்திரத்தேர் சிதைவுற்றிருந்ததால் அத்தேரை விட்டு மற்றைய தேரே இழுக்கப்பட்டது. அப்போது அவர் இருதேரும் இழுக்கமுடியாமல் போயிற்றே என்று பட்ட மனவேதனை நான் நன்கு அறிவேன். அடுத்த ஆண்டு எப்பாடு பட்டாயினும் தான்தோன்றியைத் சித்திரத் தேரில் ஏற்றி தேர் ஓட்டியே தீர வேண்டும் அதை என் கண்ணால் கண்ட பின் செத்தால் பரவாயில்லை என்று என்னோடு அடிக்கடி பேசிக்கொள்வார் அதன்படி தேர் வேலை தொடங்கி முடியும் வரை இராப்பகலாக அயராது பாடுபட்டு அடுத்த ஆண்டு இரு தேரும் பவனி வந்தபோது அவர் கண்ணால் தாரை தாரையாக ஆனந்தக் கண்ணீா விட்டு பட்ட ஆனந்தப் பெருக்கை நான் தேரில் இருந்தபடி கண்ணால் கண்டேன். "உண்மையான பக்தன் இறைவனை அலங்கரிப்பதும், அவர் திருவிழாப் பொலிவு கண்டார்த்தலும் அடியவர்களுக்கு அமுதூட்டி மகிழ்தலும் சுயமாகவே செய்வான்" இது அனைத்திற்கும் இலக்கணமானவர் காலஞ்சென்ற மேற்படி வண்ணக்கரவர்கள் அவர் எந்தவொரு கருமத்தையும் உறுதியான நம்பிக்கையோடு செய்யும் ஒரு "செயல் வீரர்" அவரின் செயல்திறன் பிற்சந்ததிக்கு ஒரு முந்நோடியானது.

காலன் வரும் முன்னே கண்பஞ்சடை முன்னே பாலுண்கடைவாய் படுமுன்னே மேல்விழுந்து உற்றார் அழுமுன்னே ஊரார்சுடுமுன்னே குற்றாலத்தானையே சுடறு! என்ற பட்டினத் தடிகளின் கூற்றுக்கிணங்க வாழ்ந்து அமரத்துவம் அடைந்த வண்ணக்கரவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சுயம்பு லிங்கப்பெருமானை வேண்டுகின்றோம்.

இவ்வண்ணம்
**சிவஸ்ரீ.மு.கு.சச்சிதானந்தக்குருக்கள்**
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய,
களுதாவளை சுயம்பு லிங்கப் பிள்ளையார் ஆலய
பிரதமகுருவும், கிழக்கிலங்கை இந்துகுருமார் ஒன்றிய தலைவரும்.

# செயல்வீரன் மறைந்துவிட்டான் அவர் செய்த திருப்பணிகள் ஒரு போதும் மறையாது

அமரர்.கதிராமப்போடி வண்ணக்கர் அவர்கள் வன்னிமை பரம்பரையில் அம்பிளாந்துறையில் தர்மப்போடி - குஞ்சிநாச்சிப்பிள்ளை தம்பதியினருக்கு மூத்த மகனாக 1911ம் ஆண்டு பிறந்தார். இவருடன் பிறந்தோர் ஒரு ஆண் சகோதரரும் ஏழு பெண் சகோதரிகளும் ஆவார்.

இவரின் ஆரம்பக்கல்வியை அம்பிளாந்துறையிலும் பின்னர் கல்முனையிலும் கற்றார். கல்வியை இடையில் நிறுத்தி விட்டு தந்தையாருடன் விவசாயத்தில் ஈடுபட்டார். பின்பு அரசடித்தீவில் காத்திகேசப்போடி - நாகமுத்து தம்பதியினரின் மகள் நல்லம்மாவை திருமணம் செய்து இல்லறம் நடாத்தியதன் பயனாக 9 ஒன்பது பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். இவர் தன் வாழ்வில் பெரும்பகுதியினை சமூகப்பணியிலும், சமயப் பணியிலும் அர்ப்பணித்தார். இவர் 1958ம் ஆண்டு தொடக்கம் 1969ம் ஆண்டு வரை ம.தெ.மே.பல.நோ.கூ. சங்கத்தின் செயலாளராக கடமையாற்றினார். இவர் காலத்தில் சங்கத்தின் நிலையான கட்டடம் உருவாக வழி வகுத்தார்.

மேலும் இவர் இறைபணியின் மகிமையை உணர்ந்து "அப்பணி செய்து கிடப்பதே என் கடன்" என்பதற்கமைய தன் வாழ்க்கையை ஈடுபடுத்தலானார். தாந்தாமலையில் அடர்ந்து கிடந்த காடுகளை அழித்து ஆலயங்களைக் கட்டு வித்தார். தீர்த்தக்குழத்தையும் திருத்தியமைத்தார். ஆலய வீதிகளையும் சாலைகளையும் செப்பனிட்டார் மலையின் உச்சியில் ஏற படிகளை அமைத்தார். புகுவாயில் கோபுரமமைத்தார். தாந்தாமலை இறைவழிபாடு பிரதேசமெங்கும் பிரபலியமடைய வழிவகுத்தார்.

அத்தோடு கொக்கட்டியூரில் கோயில் கொண்டிருக்கும் தான்தோன்றியப்பர் வழிபாட்டுத்தலத்தின் பழமையடைந்திருந்த மூலஸ்தான கோபுரத்தினைத் திருத்தியமைக்க எத்தனித்தபோது தடைகள் பல ஏற்பட்டன. அத்தடைகளை அறுத்து தலத்தின் பழைய மூல கோபுரத்தினையுடைத்து புதுப்பொலிவுடன் மூல கோபுரமமைத்தார். புதியதீர்த்தக்கிணற்றினையும் திறம்படக்கட்டுவித்தார்.

ஆண்டாண்டு காலமாக ஆண்டவனைச் சுமந்து ஓய்வு பெறும் நிலையினையடைந்த ரத்தினை ஓர்புறம் ஒதுக்கிட நினைத்தினர் அடியார் கூட்டம் மீண்டு மதனைத் திருத்தியமைப்பேன் என திடசங்கற்பங் பூண்டார். இவர் திருத்த இயலாதென அடம்பிடித்தார் ஓர் சிலர் பலரின் சவாலின் மத்தியிலும் பழைய ரதத்தினைத் திருத்திபார்புகள ஓட விட்டார். புதிய கொடிக் கம்பம் நாட்டி யாகசாலைகள் கட்டி ஆலயம் புதுப்பொலிவுறச் செய்தார்.

அரசை நகர் தன்னில் அழிந்து போகு நிலையிலுள்ள விநாயகர் ஆலயத்தினை இடித்துடைத்து இரு தலத்திலே மூல கோபுரமும் ஆலயமும் அமைத்து வைத்தார். அன்று தொட்டின்றுவரை ஆண்டவனின் பணி செய்து வருவதை அரசிரைறிந்து சீர் வரிசையிலே சிவ நெறிச்செம்மல் என்னும் சிறப்பு பெயர் சூட்டி பொன்னாடை போர்த்து போற்றிப் புகழ்ந்தனர். பண்டு தொட்டின்றுவரை பாரிலுள்ளோர் இருக்கும் வரையும் படையாட்சிகுடிப் பெருமை பார் முழுதுமோங்கச் செய்தாரிவர்.


கொக்கட்டியம் பதியில் தானாகத்தோன்றிய தான் தோன்று மப்பருக்கு மன்னன் குளக்கோட்டன் மகோன் செய்த திருப்பணி நடுவில் நின்று விட "கோமான் கொழும்பார் படையாட்சி குடியின் குல விழக்காய்யுருவெடுத்து தேசம் போற்றிட சிவ தொண்டுகள் செய்து வைத்தான் செயல் வீரன்"

"அஞ்சா நெஞ்சமும் ஆண்மையும் கொண்ட மதிநுட்ப வீரன் இவ் மண்ணில் மடிந்தாலும் அவன் செயல்கள் மடியவில்லை போற்றுவோர் போற்ற தூற்றுவோர் தூற்ற எடுத்த கருமம் இடை நடுவில் நின்றிடாது அடுத்து நிறைவேற்றிய செயல் வீரன் பிரிவு வருத்துகின்றது. எம்மவர் மனங்களை உறுத்துகின்றது துயரம்.

அன்னாரின் ஆத்மா ஆறுதலடைய எல்லாம் வல்ல
ஸ்ரீ தான்தோன்றி ஈஸ்பரப் பெருமானைப் பிரார்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி

இவ்வண்ணம்
**சிவஸ்ரீ.வ.சோதிலிங்கக் குருக்கள்**
தான்தோன்றீஸ்வரர் ஆலயம்,
கொக்கட்டிச்சோலை.



# நினைவில் நீங்கா நித்திய முத்தர்

வாழ்க்கையில் தனக்கென சிறப்பான ஓர் இடத்தைக் கொண்டு இறைதொண்டு செய்தவர் சிவநெறிச் செம்மலாகிய த.வ.வி கதிராமப்போடி அவர்கள் ஊக்கமும், உழைப்பும். ஆக்கமும் அறிவும். ஆற்றலும் வாய்க்கப் பெற்றவராய் திட நம்பிக்கையுடன் கட்டுப்பாட்டுடன் நம்பகத் தன்மையான முடிவுகளை எடுத்துச் செயற்படுத்திய எங்களுக்கு எல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்த அன்னார் எப்போதும் குறிக்கோளில் குறிவைத்துச் செயற்படுவர்.

மனிதத்துவத்தினைப் பேணி மனித நலன் காத்திட வேண்டும் என்பதில் நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தியவர்.

"ஒத்தாரும் உயர்ந்தாரும்
தாழ்ந்தாரும் எவரும்
ஒருமை உளர் ஆகி
உலகியல் நடத்தல் வேண்டும்"

என்று எல்லோரையும் ஒரே குடையின் கீழ் கொண்டு சமயத் தொண்டுடன் சமூகத் தொண்டும் ஆற்றி வெற்றி பெற்ற ஆத்மா த.வ.வி

இவருடைய மதிநுட்பத்திறன் காரணமாக பல ஆலயங்களில் நிருவாகப் பொறுப்பினை ஏற்று சிறப்பாக வழி நடத்தியவர். அவற்றுள் தாந்தாமலை, அரசடித்தீவு, பண்டாரியாவெளி ஆகிய இடங்களில் உள்ள ஆலயங்களைக் கொள்ளமுடியும். இவற்றின் அனுபவ முதிர்ச்சி கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் செயற்பாட்டுக்கு பயனாய் அமைந்தது இவ்வாலயத்தில் செயலாளராகவும் படையாட்சி குல வண்ணக்கராகவும் இருந்து இறுதிக்காலம் வரை கம்பீரமாகச் செயற்பட்ட செய்கை வீரன் த.வ.வி

ஆலயப் பணிக்காக நாற்பது வருடங்கள் சேவையாற்றிய சிறப்புக்குரிய அன்னார் அக்காலத்தில் சந்தித்த எதிர்ப்புக்கள் யாவற்றையும் தனது அனுபவ முதிர்ச்சியால் வென்று செயலாற்றியவர். தேரைத்திருத்தி வலம் வரச் செய்து மக்காளல் மாண்புற்றவர். 1978ம் ஆண்டு புயல் வீசி ஆலயம் சேதமாக்கப்பட்டிருந்த நிலையை மாற்றியமைத்து வழிபாடு இடம்பெற செயலாற்றியவர் இவ்வாறு ஆலயத்திற்காக அன்னார் ஆற்றிய பணிகளை பட்டியல் படுத்த முடியாததோடு, அவற்றிற்கு நிகரும் எம்மால் சொல்ல இயலாத அளவுக்கு புதுப்புதுச் சிந்தனைகளூடாக செயலாற்றியவர்.


அன்புதான் சகோதரத்துவத்துக்கும் உயிர் இரக்கத்திற்கும் அடிப்படை என்று அன்பினால் துன்பம், சோர்வு, பயம் போன்ற துயரங்கள் ஒழியும் எனத் தொண்டாற்றியவர்.

அன்பினைக் கைக் கொள்ளடா - இதை
அவனிக்கிங்கு ஓதிடடா!
துன்பம் இனியில்லை - உன்
துயரங்கள் ஒழிந்ததடா!

என முழங்கி திருப்பேறு பெற்ற அன்னார் என்னையும் தனது காலத்தில் தனக்குப்பிறகு செயலாளராகவும், வண்ணக்கராகவும் நியமித்து தொண்டாற்ற வழிப்படுத்தியவர். அவர் வழியில் சிறப்பாகச் செயலாற்றியும் வந்துள்ளோம். அன்னாரினது இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்றாகும். அவர் பிரிவால் வாடும் உற்றார், உறவினர்கள். நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ பா.அரியநேத்திரன்**
மட்/மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்.
தமிழ் தேசிய கூட்டமைப்பு.

“ராதாலயம்”
அம்பிளாந்துறை,
கொக்கட்டிச்சோலை.



# அப்பனின் அன்புத் தொண்டன்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" எனும்

பொய்யா மொழிக்கமைவாக இப் பூவுலகில் பல்லாண்டு காலங்கள் செயற்கரிய சேவைகள் பல செய்து வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்து விட்ட பெரும் திலகங்களும் மறக்க முடியாத பெரும் மனிதர் என்றார் அமரர். த.வ.வி. கதிராமப்போடி வண்ணக்கர் அவர்களையே சாரும் உலகம் எமக்குக் கடன் பட்டதேயன்றி உலகத்திற்கு நாம் கடன் பட்டிருக்கவில்லை என்பதில் திடம் கொண்ட அமரர்.கதிராமப்போடி அவர்கள் விட்டபணி, தொட்டபணி எனத் தொடர்ந்து தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கு அவர் செய்த சேவைகளோ அளப் பெரியது. அன்னார் 32 வருடங்கள் தொடர்ச்சியான சேவையின் ஊடாக ஆலயத்தை பரிபாலனம் செய்ததோடு சுய நலம் கருதாது. பொது நோக்கோடு தொண்டுகள் புரிந்து அன்மாவின் நல் ஈடேற்றத்திற்காகவே புண்ணியங்கள் புரிந்த புனிதர் என்றும் பெருமைப்படுத்தப்பட வேண்டியவர் நினைவு கூரப்பட வேண்டியவரே

1994ம் ஆண்டு நான் தலைவராக நியமிக்கப்பட்டபோது என்னோடு ஒத்துழைத்து பல அனுபவங்களைப் பகிர்ந்ததோடு பல ஆண்டுகள் புனருத்தாரண வேலைகள் எதுவும் நடைபெறாமல் தேங்கிக் கிடந்த ஆலய கட்டடப் பணிகளை செய்து முடித்து ஆலயம் 1998ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற பெரும் பங்காற்றியவர். அது மட்டுமன்றி ஓட முடியாமல் இருந்த பழம் பெரும் தேர்கள் இரண்டும் கட்டி முடிக்கப்பட்டு தேரோட்டத்தினை நடாத்தி மக்களுக்கு காண்பித்த பெருமையும் அமரர்.கதிராமப்போடி வண்ணக்கர் அவர்களையே சாரும்.

"தற்துணிவு" எனும் பெரும் உடமைக்குரியவர் அமரர்.கதிராமப்போடி வண்ணக்கர் அவர்களே. இவர் எவர் தயங்கி நிற்கும் செய்ய முடியாத வேலைகளையும் தான் முன்னின்று இலகுவாக செய்து முடிக்கும் வல்லாளர். இத் திறமையினாலேயே இவர் எல்லோராலும் விரும்பப்படுவார். எதற்கும் தயங்காது கம்பீரமாகப் பேசுவார். இதனால் எங்கு சென்றாலும் எதிலும் வென்று பெருமை சேர்த்தவர். இவைகளாலேயே தான் ஏற்கும் எவ் வெலைகளாக இருந்தாலும் அவற்றை இலகுவில் நிறைவேற்றி சாதனைகளை சரித்திரங்களாக படைத்து விட்டு இப் பொய்யுலக வாழ்வதனை புறந்தள்ளி மேலுலகை அடைந்து விட்டார். அன்னாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாததாய் இருந்தாலும் அவர் வாழ்ந்த பல ஆண்டுகளில் (95 வருடம்) புரிந்த சேவைகளை நினைவு படுத்தி சமாதானமடைவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று எல்லாம் வல்ல ஸ்ரீ தான்தோன்றீஸ்வரரை பிரார்த்திப்பதோடு இவரின் குடும்பத்தாருக்கும் எமது ஆலய பரிபாலன சபையின் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"பூதவுடல் அழிந்தாலும் இவரின் புகழுடல்
என்றும் நிலைத்திருக்கட்டும்"

**அ.இராசதுரை** (வண்ணக்கர்)
தலைவர்
கொக்கட்டிச்சோலை
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்

# செயல் வீரன் சிவநெறிச் செம்மல்

உயரிய சிந்தனையும், எதிர்காலச் செயற்பாடும் அதனை மக்கள் போற்றி நடக்க வேண்டும் என்ற எண்ணமும் வாய்க்கப்பெறுமாக இருந்தால் அதுவே வாழ்க்கையின் வெற்றியாகவும் அமைந்துவிடும் என்ற நோக்கம் நிறைவேற வாழ்ந்து வாழ்க்கையே அதுவென செய்கையால் காட்டியவர் எங்கள் பாசத்தின் பொற்குடம் த.வ.வி. இவர் ஆரம்பக்கல்வியைச் சிறப்பாக தான் பிறந்த மண்ணான அம்பிளாந்துறையூரில் பயின்று பின்னர் கல்முனை சென்மேரிஸ் கல்லூரியிலும் மற்றும் மட்டுநகரிலும் ஆங்கில மொழியுடன் கற்று சமூக சேவையில் தன்னை இணைத்துக் கொண்டவர். அன்னாரினால் இடப்பட்ட சமூகப்பணி வித்து முளைத்து மரமாகி கிளைவிட்டு பழமாகி அதை மக்கள் ருசித்து மீண்டும் நிலத்தில் விட்டிருக்கின்றர்.

தனக்கென வகுத்துக் கொண்ட சமூக சிந்தனையில் ஊடாக சமூக அபிவிருத்திப் பயணத்தில் நீண்ட காலம் பயணித்த செம்மல் இளமைப் பணியை கூட்டுறவு பணிப்பாளர் சபையூடாக முன்னெடுத்துச் சென்றார். மேலும் நாற்பது வருட காலமாக ஆலயப்பணிக்கென தன்னை அர்ப்பணித்த மகான் கொழும்பார் என்ற சிறப்புப் பெயருடன் வாழ்ந்து வந்தார். அரசடித்தீவு, தாந்தாலை, நாகதம்பிரான் ஆலயங்களில் செயலாளராக இருந்து சிறப்பாக சீரிய சிந்தனையைச் செயற்படுத்தி கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலே ஆலய பரிபாலன சபைச் செயலாளராகவும், படையாட்சிகுல வண்ணக்கராகவும் இருந்து ஆற்றிய பணி எம்மை விட்டு என்றும் அகலாது.

தான் செய்த ஆலய சேவையைக் கௌரவித்து அன்னாருக்கு **"சிவநெறிச் செம்மல்"** என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். எங்கள் செயல்வீரர் த.வ.வி. தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் செய்த பணிகள் எம்மை இன்னும் ஒரு கணம் சிந்திக்கவே செய்கின்றது 1978ம் ஆண்டு புயலடித்த பொழுது ஆலயம் சேதமாக்கப்பட்டிருந்தது அதனால் வழிபாடு இடம்பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்பட்டது. அவற்றை நிறைவு செய்யும் பணியில் ஈடுபட்டபோது இளைஞர் குழுவொன்று எதிர்த்து அதற்காக துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டு இப்பணி முடியாது என்று எள்ளி நகையாடினர். அப்பொழுது அவற்றைப் பொருட்படுத்தாமல் எங்கள் செம்மல் தான் முன்னெடுத்த பணியை முனைப்புடன் நிறைவேற்றியமை எம் நினைவில் இருந்து நீங்கவில்லை.


மேலும் 1998ம் ஆண்டு வரையும் இருபது ஆண்டு காலம் அப்பனின் தலத்தை தேர்வலம் வரவில்லை அதனால் மக்களிடையே பலவிமர்சனக் கருத்துக்களும் எழவே செய்தன. இவற்றை தனது மனக்கண் கொண்டு ஒரு

சில உள்ளூர் தச்சர்களின் உதவியைப் பெற்று இரண்டு தேரையும் இயன்றளவு சரி செய்து அந்த ஆண்டே ஓடச் செய்த செயல்வீரன் த.வ.வி இவரது அந்த முயற்சியின் பயனாலே அதே திருத்தத்தோடு இன்னும் இரு தேர்களும் வலம் வருகின்றன. அத்தோடு படையாட்சி குலமக்களின் உதவியுடன் சிவன் கோயிலினுள் அமைந்திருக்கும் முருகன் ஆலயத்தையும் தனது முயற்சியின் பலனாக நிறைவேற்றியவர்.

எங்கள் சொல்லின் செல்வன் சமூகத்திலும் ஆலயத்திலும் மேற்கொண்ட பணிகளுக்கு நிகரேது மலையெனத் தடை வரினும் மனம் நிலை குழம்பாமல் தான் முன்னெடுத்த பணியை மனதார மேற்கொண்டவர் "மக்கள் சேவையே மகேசன் சேவை" என வாழ்ந்த இவர் எப்பணியும் எம்பணி என தனது இறுதிக் காலத்திலும் ஓர் இளைஞனின் துடிப்புடன் "எழுமின் விழுமின் எண்ணிய கருமம் கைகூடும் வரை அயராது உழைமின்" என்று தனது நோக்கை சமூகத்திலே நிறைவேற்றியவர். எங்கள் சொல்லின் செல்வன் பொற்குடம் செயல் வீரன் எனக்கும் பல புத்திமதிகளைக் கூறி சிறந்த முறையில் வழிப்படுத்தி என்னையும் தனது வழித்தோன்றல் பணியிலே சேவை செய்ய நியமித்தமையை பார்க்கும் போது அன்னார் குறிப்புணர்ந்து செயற்பட்ட காலத்தை மீளுருவாக்கும் செய்கின்றது.

சமூக சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்து சமுதாயத்திலே குலமுறை சொல்லி இன, மத, சாதி, பேதம் பாராமல்
அங்கமெல்லாம் குறைந்து அழுகும் தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்று உழலும் புலயரேனும்
கங்கைவார் சடைக்கரத்தார்க்கு அன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாலே
என்ற அப்பரின் சிந்தனையிலே வாழ்ந்து, செயலாற்றி வித்தாகிய எங்கள் வழிகாட்டி இறைபதம் அடைய அனைத்து மக்கள் சார்பாகவும் எங்கள் தான்தோன்றீஸ்வரனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தார்க்கும் பொது மக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



**இ.சாந்தலிங்கம்** (கி.உ)
சமாதான நீதவான்
செயலாளரும், வண்ணக்கரும்
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்
கொக்கட்டிச்சோலை.

# அமரர்.சிவநெறிச் செம்மல் த.வ.வி கதிராமப்போடி வண்ணக்கர்

எம்மோடு நீண்டகாலம் வாழ்ந்து பெரும் பணியாற்றி எம்மை விட்டு பிரிந்து சிவபதம் அடைந்த அமரர்.சிவநெறிச் செம்மல் த.வ.வி கதிராமப்போடி வண்ணக்கர் அவர்களின் வாழ்க்கையை ஆராயும் போது அவரது குடும்ப வாழ்க்கை பொதுப்பணி, தொழில், ஈடுபாடு, சமயப்பணி போன்ற தலைப்புக்களில் ஆராய முடியும்.

இவரது குடும்ப வாழ்க்கையை எடுத்துக் கொண்டால் இவர் அம்பிளாந்துறையில் உயர் குடியில் பிறந்து அரசடித்தீவில் திருமணம் செய்து நற்பண்பும், கல்லி அறிவும் உள்ள பிள்ளைகளைப் பெற்று அவர்களோடு சீரும் சிறப்புமாக வாழ்ந்தார்.

"தந்தை மகற்காற்று உதவி அவையத்து முந்தியிருப்பச் செயல்" என்ற வள்ளுவர் கூற்றுக்கு ஏற்ப தன் பிள்ளைகளை உயர் நிலைப்படுத்தியவர் இவருக்கு நல்ல பிள்ளைகள் நல்ல மருமக்கள், நல்ல பேரப்பிள்ளைகள் கிடைக்கப்பெற்றமை இவரது சிவத்தொண்டுக்கு கிடைத்த பெருவெற்றி என்று கூறினால் மிகையாகாது.

இவர் பொதுப்பணிகளில் மிக ஈடுபாடு கொண்டவர் கிராமங்களில் உள்ள அமைப்புகளிலும் பொதுவேலைத் திட்டங்களிலும் பணியாற்றி உள்ளார், விசேடமாக இவரிடம் இருந்த திறமையைக் கண்டு கூட்டுறவு சமாசத்தில் இவரை ஒரு பணிப்பாளராக நியமித்தார்கள். இதில் இவர் பெரும்பணியாற்றி மட்டக்களப்பில் கூட்டுறவு துறை வளர்ச்சியடைவதற்கு அரும்பாடுபட்டவர்.


இவர் ஒரு சிறந்த விவசாயி விவசாய துறையில் கடினமாக உழைத்து தன் குடும்பத்தின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியவர். மண்முனைப்பிரதேசத்தில் உள்ள போடிமார்களில் இவரும் ஒருவராவார். மேற்கூறியவையாவற்றுக்கும் மேலான இருவரது சிவத்தொண்டு அளப்பரியது. தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நீண்ட காலம் படையாட்சி குல வண்ணக்கராக இருந்து பெரும் பணியாற்றினார். இவர் ஒரு தற்துணிவும், எதையும் செய்து முடிக்கும் திறமையும் கொண்டவர். பலகாலம் புனருத்தாரணம் செய்யாது பழமையாக இருந்த கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தை பலருடைய எதிர்ப்புக்கும் மத்தியில் சில இளைஞர்களின் உதவியுடன் உடைத்து அழகான சிற்பக் கோயில் அமைவதற்கு முன் நின்று உழைத்தவர். இதே போன்று ஓடமுடியாது என்று கூறிய தேரை தனது தொழில்நுட்ப அறிவால் உள்ளூர் வாசிகளைக் கொண்டு திருத்தி தேரோட்டம் நடத்தியவர்.

இவர் ஒரு சிறந்த நிருவாகி தற்துணிவுள்ளவர் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய மகாசபை பல பிரச்சினையும் வாக்கு வாதமும் கூடியது அப்படியான ஒரு நிருவாகத்தில் எல்லாவற்றையும் சமாதானப்படுத்தி ஒரு நீண்ட காலம் சிறந்த நிருவாகியாக இருந்தார். என்றால் இவரது திறமைக்கு நிகரே இல்லை என்று கூறலாம்.

தான்தோன்றீஸ்வரத்தின் முழுநேர ஊழியனாக இருந்தது மட்டுமன்றி தாந்தா மலையின் உயர்வுக்கும் பெரும் பணியாற்றி முருகனை மக்கள் இலகுவாகச் சென்று வணங்க படியும் அமைத்துக்கொடுத்தார்.

இவ்வாறு பல துறைகளிலும் சிறந்து விளங்கி சிவதொண்டை தனது முழுநேரத் தொண்டாகச் செய்து சிவநெறிச் செம்மல் என்ற சிறப்புப்பட்டத்தையும் பெற்ற வண்ணக்கர் எம்மை விட்டுப் பிரிந்தாலும் அவரது சேவை என்றும் என் நெஞ்சை விட்டுப் பிரியாது அன்னாரது 31ம் நாள் கிரியையான இன்று அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரது பிரிவுத்துயரால் வாடும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**க.ஆறுமுகம்**
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர்
ஆலய வண்ணக்கர்.



# செயல்வீரர் சிவநெறிச் செம்மல்
# அமரர்.த.வ.வி கதிராமப்போடி வண்ணக்கர் அவர்கள்

மண்முனைப்பிரதேசத்தில் 40 ஆண்டுகள் சமயப்பணியாற்றிய ஒரு பெருமனிதன் எம்மை விட்டுப்பிரிந்து இன்று 31ம் நாள் முடிந்து விட்டது. இப்பெரியார் இறந்தாலும் இறவாப்புகழ் பெற்றவர் என்றே கூறவேண்டும்.

எலலோரும் தமது தொழில்முயற்சியில அல்லது கல்வியில் குடும்ப உயர்வுக்காகத்தான் முழுநேர உழைப்பாளியாக இருப்பார்கள். ஆனால் கதிராமப்போடி வண்ணக்கர் அவர்கள் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் முழுநேர உழைப்பாளியாக இருந்ததனை யாம் அனைவரும் அறிவோம்.

தனது குடும்பச்சுமையையும் தாங்கிக்கொண்டு சிவபணிக்குத்தன்னை அர்ப்பணித்த பெரியார் மிகவும் தற்துணிவு கொண்டவர். 1978ம் ஆண்டு புயல் காரணமாக சேதமடைந்திருந்த ஆலயத்தைப் புனரமைக்க முயன்றபொழுது இளைஞர்களின் எதிர்ப்பு, துண்டுப்பிரசுரங்களும் கோர்ட்டில் வழக்கும் எனப் பல தரப்பட்ட பிரச்சினைகள் இவை யாவற்றையும் எதிர்த்து நின்று நிருவாக சபையின் உதவியுடனும், பல நலன்விரும்பிகளின் உதவியுடனும் கோயிலை உடைத்து புதிய கோயில் அமைப்பதில் முன்நின்று உழைத்தவர். இதே போன்று பல வருடங்கள் தேர் பழுதடைந்ததால் தேரோட்டம் நடைபெறாமல் இருந்தது தனது தற்துணிவு காரணமாகவும் தனக்கிருந்த தொழில்நுட்ப அறிவு காரணமாகவும் இரண்டு தேர்களையும் திருத்தி தேரோட்டம் நடத்திய பெருமை அமரர்.த.வ.வி கதிராமப்போடி வண்ணக்கர் அவர்களையே சாரும்.

ஆலயத்தின் செயலாளர் பதவியை ஏற்றகாலம் தொடக்கம் புதியதொரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர். குடிமுறை கூறுவதில் சிறந்து விளங்கியவர். கதிராமப்போடி வண்ணக்கர் என்றால் மக்களுக்கு பெரிதாகத் தெரியாது. "கொழும்பார் என்றால் உடனே எவருக்கும் தெரிந்து விடும் அளவுக்கு இந்தச் சிறப்புப்பெயர் இவருக்கு அமைந்திருந்தது. எப்பொழுதும் ஆலயத்தின் வளர்ச்சியிலே கண்ணும் கருத்துமாக இருந்து செயல்பட்டவர் மற்றவர்களை ஊக்கப்படுத்தி அவர்களின் சேவையைப் பெற்றவர்.

படையாட்சி குலமக்களின் தலைவனாக தன் உயிருள்ளவரை உழைத்து அக்குடி மக்களினால் மதிக்கப்பட்டவர். அவர்களை ஒன்றிணைத்துச் சகல கோயில் விழாக்களையும் சிறப்புறச் செய்து குடிக்கு பெருமதிப்பைத் தேடித் தந்தவர். இவரது பிரிவு படையாட்சி குல மக்களுக்கு பேரிழப்பாகும் என்பதில் ஐயமில்லை தெய்வபணி நம் மக்களையும் சந்ததியையும் வாழ வைக்கும்

என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டு வாழ்ந்தவர். கோபம். ஆத்திரம் என்பவற்றை விட அன்பு, பணிவு. நகைச்சுவை மூலம் சகலரையும் தம்வசப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தவர். இப்பெருமகனார் எம்மை விட்டுப் பிரிந்தது எமது பிரதேசத்திற்கும், சிறப்பாக தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கும் பேரிழப்பாகும்.

நீண்டகாலம் சமயப்பணியாற்றி "சிவநெறிச்செம்மல்" என்ற சிறப்புப் பட்டத்தையும் பெற்ற பெரியார் இப்பிரதேசம் பெற்றெடுத்த அருந்தவப்புதல்வன். எமது மக்களுக்கு சமயப்பணி இப்படித்தான் செய்யவேண்டும் என காட்டிச்சென்ற மணிவிளக்கு இப்பிரதேசத்துக்கு கிடைத்த முத்து. அன்னாரது 31ம் நாளான இன்று அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரது பிரிவால் வாடும் குடும்பத்தார்க்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்**
**பரிபாலன சபை**
நிருவாக உறுப்பினர்கள்.



உ

சிவமயம்

# எனது நண்பன் கொழும்பார்

தீராத வினை எல்லாம் தீர்க்கும் லிங்கம், ஜெகமெல்லாம் அருள் புரியும் சுயம்பு லிங்கம் பார்புகளும் மண்முனைப் பிரதேசத்துள் ஈழத்துக் காசி எனப் போற்றிப் புகழும் கொக்கட்டிச்சோலையுள் அமைந்துள்ள தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் பாரம்பரிய குடிகளுள் ஒன்றாகிய படையாட்சி குடி மக்களின் வாரிசாகிய வண்ணக்கர் த.வ.வி.கதிராமப்போடி இவ் ஆலயத்தில் அரும்பெரும் சேவையாற்றியுள்ளார் என்பதனை அனைவரும் அறிவார்கள் இவர் இவ் ஆலயத்தில் சுமார் நான்கு தசாப்தமாக நற் சேவை செய்துள்ளார். தனக்கென ஒரு சிறந்த தனிப் பாணியை கடைப்பிடித்து அதில் எவ்வகையான சிரமம் வந்தாலும் தயங்காது நடைமுறைப்படுத்துவதில் நம்பிக்கையும் வெற்றியும் அடைபவர் என்பது கண்கூடு.

1994ம் ஆண்டு இவ் ஆலயத்தின் நிருவாக சபை உறுப்பினராக நான் தெரிவு செய்யப்பட்டதில் இருந்து என் நண்பன் கொழும்பாருடன் மிக நெருங்கிய நட்புக் கொண்டிருந்தேன் சுமார் 1950 இல் அரசடித்தீவில் ஒரு நாட்டுக் கூத்தில் பாத்திரம் ஏற்று மிகத் திறம்பட நடித்த காட்சியை கண்டுகளித்தவர்களுள் நானும் ஒருவர். போக்குவரத்து வசதிகள் குறைவான அக்காலத்தில் மட்டக்களப்பு சென்று வீடு திரும்பும்போது மண்முனையில் இருந்து நடந்தே வருவார். அவ்வேளையில் கொக்கட்டிச்சோலை சின்னப்பாலத்தடியில் இருந்து விருத்தப்பாடலுடன் பாடிக் கொண்டே வருவார். அவருடைய அந்த நாள் சீருடை வேட்டியும் தரமான பெறுமதியுள்ள கோட்டுமாகும். அவருடைய கோட்டில் காணப்படும் பொத்தான்கள் எல்லாம் "பவுண்" என்றுதான் கூறமுடியும். அத்துடன் இருகைகளிலும் பிள்ளைகளுக்கான உணவுப் பொருட்கள் என்றும் காணப்படும் எமது தேனீர்க் கடையில் தரித்துச் செல்வது அவரது வழக்கமாகும். எனது பெற்றோருடன் மாமா, மாமி, என மிகவும் பண்பாக பேசிப்பழகும் எனது நண்பன் என்னை அன்புடன் "ஆளே" என்றும் அன்புடன் என் முதுகில் தட்டிச் செல்வது இன்றும் என் மனக்கண் முன் நிற்கின்றது.

ஆலய நிருவாக விடயத்தில் பலமுறை நான் எனது நண்பனுடன் முரண்பட்ட சந்தர்ப்பங்கள் உண்டு எனினும் அதன்பின் நான் அவருக்கு "ஆளே" தான் இது தான் அவருடைய ஆளுமைக்கான சிறந்த சான்றாகும் இதற்கான சான்றாக சில சந்தர்ப்பங்களை கூறலாம் 1994இல் நான் நிருவாக சபை உறுப்பினராக 3வது கூட்டத் தொடரில் ஆலய நடைமுறை விடயமாக சில முரண்பாடு ஏற்பட்டது. எனினும் கூட்டத்தொடர் முடிந்த பின் எனது

கையைப் பிடித்து தனியாக கூட்டிச் சென்று அன்புடன் "ஆளே" எமக்குள் பிரச்சினை வரக்கூடாது எனக் கூறி பாரம்பரியத்தின் அவசியம் பற்றியும் அன்றைய விவாதத்தின் தாற்பரியம் பற்றியும் சுருக்கமாக கூறி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு பற்றியும் அறிவுறுத்தினார். பாரம்பரியம் பற்றிய அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர். ஆளுமைக்கு இலக்கணமானவர். ஒரு தலைவன் கொண்டிருக்க வேண்டிய தன்மயமாக்கல் எனும் விசேட பண்பை கைக்கொண்டு யாரையும் தன் பால் ஈர்த்து தனது சிந்தனையை செயலாக்கியவர் எனது நண்பன் கொழும்பார். நிருவாக சபை கூட்டத்தில் பெரும்பான்மையினரால் தீர்மானிக்கப்பட்ட விடங்களையும் எதிர்ப்புகள் தோன்றும் போதும் தனது ஆளுமையைப் பயன்படுத்தி தீவிரமாக நடைமுறைப்படுத்தும் இயல்ப்பை என்றும் காணலாம்.

எனது நண்பனை பற்றி பலரும் பலவிதமான கருத்துக் கொண்டிருந்தனர். எனினும் அவர் தன் வழியில் என்றும் தடம்புரளாமல் சென்று சாதனை படைத்தவர். ஒரு சந்தர்ப்பத்தில் அவர் மீது ஏவப்பட்ட விமர்சனம் பற்றி அவரிடன் நான் நேரடியாக "நீங்கள் ஆலயப்பணத்தை சொந்தச் செலவுக்கு பயன்படுத்துவதாக கூறுகின்றார்களே என உரிமையுடன் கேட்டேன். அதற்கு என் நண்பன் ஆளே.. நீங்கள் அரசாங்க ஓய்வூதியத்தில் வாழ்கின்றீர்கள் நான் ஆண்டவன் அளக்கும் படியில் வாழ்கின்றேன். எனக்கூறி தன் மீதான விமர்சனத்திற்கு பதில் கொடுத்தார்.

எனது நண்பன் மட்/அர்சஸ்ர மரியாள் கல்லூரியில் கல்விகற்றுவிட்டு எமது பாராம்பரிய தொழிலான விவசாயத்தில் நிபுணத்துவத்துடன் ஈடுபாடு காட்டினார். அதன் தொடர்ச்சியாக வட்டை விதானை பதவியை பெற்று தன் நேரடி வழிகாட்டலை தன் பிரதேச விவசாயிகளுக்கும் பிரயோகித்தார். இதன்மூலம் தான் மட்டுமன்றி ஏனையோரும் விவசாயத்தில் மேம்பட வேண்டும் என எண்ணியவர் எனதருமை நண்பன் அவருடைய ஆளுமையின் தொடர்ச்சியாக அவருடைய படையாட்சி குடி மக்களால் தானைத் தலைவனாக ஏற்றுக் கொள்ளப்பட்டு தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் குடி வண்ணக்கராக நியமிக்கப்பட்டார். அவருடைய திறமைக்கு கிடைத்த வெகுமதியாக ஆலயத்தின் முழுநேர செயலாளராக செயற்பட்டு தன் அயரா முயற்சியின் மூலம் சிறந்த வழி நடத்தலை மேற்கொண்டு 1998ம் ஆண்டு மகா கும்பாபிஷேகத்தை நடத்திய பெருமை அவரையே சாரும் பின் மண்டலாபிஷேகத்தையும் தனது வழிகாட்டலுடன் அனைவரின் ஒத்துழைப்புடன் செய்து முடித்து சுயம்புலிங்க வரலாற்றுக்குப் பெருமை சேர்த்தார் எல்லோருடனும் வேடிக்கையாக பழகும் எனது நண்பனை மண்டலாபிஷேகத்துக்கு வந்த பக்தர்களில் சில மகளிர் கூட்டம் சூழ்ந்து கொண்டு ஐயா உங்களை ஏன் 'கொழும்பார்' என அழைக்கின்றார்கள் என பவ்வியமாக வினாவினர் நகைச்சுவை மிகுந்த என்

என் நண்பன் அதற்கு பிள்ளாய் நான் கொழும்பில் படித்த படியால் என்னை அவ்வாறு கூறுகின்றனர். என காஸ்யமாக பதில் கூறினார். ஆனால் அவர்கள் அவரை வாஞ்சையுடன் கிள்ளி விட்டு ஆகா பொய் பொய் எனக் கூறி அவரிடம் பஞ்சாமிர்தம் வாங்கி உண்டு விட்டு அன்புடன் ஆசி பெற்று விடை பெற்றனர். இவ்வாறு எவ்வயதினரையும் தன்பால் ஈர்க்கும் திறமையை கொண்டிருந்தார். ஆலய அனைத்து பாரம்பரிய நடைமுறைகளையும் தன் விரல் நுனியில் கொண்டிருந்தார். இவரின் சிறந்த சமயத் தொண்டினை கௌரவிக்கும் முகமாகவும் பாராட்டும் முகமாககவும் இந்து கலாச்சார அமைச்சினால் "சிவநெறிச் செம்மல்" எனும் உயரிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

1998இல் ஆலயத் தேர்கள் சிதைவுற்று காணப்பட்டன. சிற்பிகளை அழைத்து ஒரு தேரையாவது ஓடவிட ஏற்பாடு செய்யுமாறு கூறப்பட்டது. இதே வேளை பிள்ளையார் தேரை திருத்தி ஓடலாம் என ஆலோசனை கூறப்பட்டது. ஆனால் நிருவாக சபை புதியதேர் செய்து ஓடவிடும் தீர்மானத்தை கொண்டு வந்தது. எனது நண்பனும் ஏற்றுக் கொண்டார். ஆனால் பின் அவர் அதே பிள்ளையார் தேரை வலம்வர வைக்க நினைத்து நான் உட்பட பலர் தீர்மானத்தினை (நி.சபை.தீர்மானம்) கூறியும் தன் ஆளுமையால் தலைவர், பொருளாளர்களை தன் வசப்படுத்திக் கொண்டு தான் நினைத்த பிள்ளையார் தேரை வலம் வரவைத்தார் இது அவரின் தன்னம்பிக்கைக்கு ஓர் உதாரணமாகும். இதே வேளை என்னை எதிரியாக கருதிய நண்பன் ஆலய திருப்பணியில் என்னுடன் இருந்தவர்களைப் பார்த்து "தேர் ஓடிவிட்டேன்" என பெருமையாகக் கூறி என்னைப் பார்த்து இவர்கள் நேற்று வந்தவர்கள் எனக்கூறினார். நானும் உரிமையுடன் என் நண்பனைப் பார்த்து நான் என்ன சாகும் வரை பதவியை கொண்டிருக்கவா வந்தேன் என கூறினேன். நகைச் சுவையாகச் சிரித்த என் நண்பன் பின் சமாதானமாகி கடமைகளை கவனிக்கத் தொடங்கினார். இவ்வாறு பல்வேறு வகையான திறமைகளையும் கொண்ட கௌரவ செயலாளர் தன்பன்முக ஆளுமை மூலம் தன் குடும்பம் செழிக்க வழி காட்டியதுடன் தன் சமுதாயத்திற்கும் சமுதாய தாபனமான ஆலயத்தின் வளர்ச்சிக்கும் அரும்பணியாற்றினார். இவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற வேண்டி அனைவரும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**மா.அமரசிங்கம்**

அகில இலங்கை சமாதான நீதவான்

ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய சிரேஸ்ர நிருவாக சபை உறுப்பினர்.

# சிவநெறிச் செம்மல் த.வ.வி கதிராமப்போடி வண்ணக்கர்.......

இறைவன் தானாகவே தனது லிங்கத்திருமேனி தர்சனமளித்து பக்த பரிபாலனம் செய்த சுயம்புலிங்கத் திருத்தலமே ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயமாகும்.

இனிமையான மொழியையும், பழமையான பண்பாட்டு விழுமியங்களையும் தனக்கேயுரிய தமிழினம் பல வழிகளிலும் தளர்ந்து, நலிந்து, கலங்கித் தத்தளித்த காலப் பகுதியில் ஆலய புனருத்தாரண வேலைகள் நடைபெறுவதென்பது அதுவும் கொக்கட்டிச்சோலைப் பதியில் என்றால் அதன் இன்னல்கள் சொல்லித்தெரிய வேண்டியதில்லை. இவ்வாறான கால கட்டத்தில் சீமெந்து, இரும்புக்கம்பிகள். பலகைகள், கல், மண் போன்றவற்றை ஆலயத்திற்கு எடுத்துவருவதும், ஆலய சிற்பங்களைச் செதுக்கும் சிற்பிகளை எமது நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் அழைத்துவருவது இலகுவான காரியமாகாது. ஆயினும் இவற்றை இறைவனின் ஆசீர்வாதத்துடன் தனது முதுமையிலும், துடிப்பான இளைஞன் போன்று முழுநேரப்பணியாளனாகச் செயற்பட்டதால் ஆலய புனராவர்த்தன பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகம் 1998.06.07ந் திகதி நடைபெற்றதென்றால் அது அமரர்.சிவநெறிச் செம்மல் த.வ.வி. கதிராமப்போடி வண்ணக்கர் அவர்களை இறைவன் தெரிந்தெடுத்து அவரை வழி நடத்தியதென்றே கூறலாம்.

இருபது வருடங்களாக ஒரேயிடத்தில் அசையாது இருந்த சோழர்கால இரு சித்திரத்தேர்களும் இயங்க முடியாதென பொறியியலாளர்களும் தேச மகா சபையினரும் முடிவெடுத்த பின்னர் தான் தனியொருவனாக நின்று இரு தேர்களையும் இரவு பகலாக இருமாதங்களுக்குள் திருத்தியதால் 1998 முதல் இன்று வரையும் தேரோட்டம் நடைபெறுவதென்றால் அது அன்னாரை இறைவன் இதற்கென்றே படைத்தது எனலாம்.

அன்னாரது நாப்பது வருடகால வண்ணக்கர் சேவையில் ஆலயத்தில் பல சீர்திருத்தங்களும், புதுமைகளும் இடம்பெற்றன. அன்னார் இதற்காக பல சோதனைகளையும், வேதனைகளையும் கடந்து உறுதியாகவும், உற்சாகமாகவும், தைரியத்துடனும் செயற்பட்டதுடன் அனைவருடனும் அன்பாகவும், பண்பாகவும், கனிவாகவும் நடந்து கொண்டதை யாவருமறிவர்.

இவ்வாலய பணியுடன், தனது படையாட்சி குலமக்களையும் இறுதி மூச்சுவரை ஆளுமைமிக்க தலைவனாக இருந்து கட்டுக்கோப்பாக வழிநடத்தியதுடன் நின்றுவிடாது அரசடித்தீவு ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலய தலைவராகவும் செயற்பட்டவர். தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயத்திலும் தனது பணியைச் சிறப்பாகச் செய்தமைக்கான சான்றாக தாந்தாமலைப் பதியிலுள்ள படிக்கற்கள் சான்று கூறுகின்றன.

சைவப்பணியுடன் மாத்திரம் நின்று விடாது தனது இல்லற வாழ்விலும் பேரும் புகழுடனும் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ்ந்த அன்னாரை தனது சேவைகளைப் பாராட்டி இந்து கலாசார அமைச்சால் "சிவநெறிச் செம்மல்" எனும் கௌரவமும் வழங்கபட்டதன் மூலமாக இவரது பணியினை எழுத்துக்களால் உள்ளடக்க முடியாதென யாவருமறிவர்.

இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், மற்றும் உற்றார். உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றேன்.

சுபம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

**திரு.எஸ்.ஜெயராஜா** (ஆசிரியர்)
கணக்காய்வாளர்,
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் தேவஸ்தானம்.



# வாழ்வை வென்ற தொண்டருக்கோர் வாழ்த்துப்பா

அம்பிளாந்துறையில் அவதரித்து
அகிலமதில் பெயர் பெற்று
அறப்பணிக்காய் அர்ப்பணித்து
அனைவரையும் அதற்கழைத்து
அறிவுரைகள் பல கூறி
அன்பெனும் குடை பிடித்து
அளவறிந்து செயல் பட்டு
அடிக்கமலம் சென்றனையோ!

தேர் ஓடும் வீதியிலே
பார் புகழும் பகுதியிலே
பரிதோம்பி வாழ்ந்து
பழகினாயே நட்புடனும்
பேதமை அகன்று வாழ்ந்து
பிறவிக் கடல் நீந்தி
பெருமையின் சின்னமாக
பொற்கமலம் சென்றனையோ!

பணி செய்யப் பிறந்து
மரணித்தாய் மக்களுக்காய்
துணிவாகச் செயற்பட்டாய்
தூர நோக்கம் கொண்டு
குட்டக்கல் மதிலுன்னைக்
குவலயத்தில் பறைசாற்றும்
மட்டில்லாச் சேவகனாய்
மடிந்தாயோ பொற்கமலம்

தாந்தாமலை தொடங்கி
தான்தோன்றீஸ்வரம் வரைக்கும்
தெய்வத்தின் கட்டளையால்
தெவிட்டாது பணி செய்து
மெய்மை உரைத்து நீயும்
மெய் சிலுக்க வைத்தாயே
வென்று விட்ட வீரனே
சென்றாயோ பொற்பாதம்

எப்பணியும் எப்பொழுதும்
தப்பாமல் செய்திடுவாய்
பண்போடு வழி நடத்தி
பளிச்சிட்டாய் முத்தாக
எதிர்த்தவர் எதிர்த்தாலும்
எள்ளி நகையாடினாலும்
உணர்த்தி விட்டுச் செயலை
உந்திக் கமலம் சென்றனையோ!

குலமுறை கூறிடுவாய்
குறிப்புணர்ந்து செயற்பட்டாய்
நித்தமும் தொண்டாற்றி
தித்தித்தாய் அப்பனுக்காய்
நாப்பது வருடமாய்
மோப்பமுடன் பணி செய்து
சிவநெறிச் செம்மலாய்
சிவபதம் அடைந்தனையோ!

நடமாடும் தொண்டனாய்
நாலு திசையும் சென்று
நட்டாயே அறக் கொடி
எட்டுத் திக்கும் வியந்திடவே
வெட்டி விட்டாய் விதானமாய்
திட்டமிட்டுப் பேதமையை
தொட்டது எம்மனதை
தொட்டனையோ பொற்கமலம்

ஆவணங்களைப் பாதுகாத்து
அரணாய் அமைந்தவரே
முன்னின்று உழைத்தாயே
முயற்சிதான் வாழ்க்கையென்று
மலமும் சலமும் அற்று
மக்கள் தொண்டு செய்தவரே
கடவுளின் அழைப்பினாலே
தாடலையாய் கலந்தனையோ!

**முருகு தயாநிதி**
அம்பிளாந்துறை மக்கள் சார்பாக

# குகன் குலத்து குலவிளக்கு அணைந்தது

ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய முன்னாள் தேசமகாசபைச் செயலாளரும் "சிவநெறிச்செம்மல்" அமரர்.த.வ.வி. கதிராமப்போடி வண்ணக்கர் அவர்களின் 31ம் நாள் நினைவில் சில துளிகள்.....

"நீ குலமே படையாட்சி குலத்தவருள் திறத்தோருள் படைத்துணைக்கு தலைவர்" காலஞ்சென்ற அமரர்.த.வ.வி. கதிராமப்போடி வண்ணக்கர் அன்னார் திக்கெட்டும் திசைதோறும் நன்மதிப்பு, நற்பண்பு, நற்குணம் பெற்றதொரு பெருமகனாவார்.

கொக்கட்டி ஊரதனில் குடிகொண்டு அருள்பொழிந்து கொண்டிருக்கும் தான்தோன்றீஸ்வரப் பெருமானுடன் இரண்டறக் கலந்து 37 வருடங்களுக்கு மேலாக சிவதொண்டாற்றியவர். புத்திசாதுரியமும் துணிச்சலான போக்கும் அஞ்சா நெஞ்சமும் கொண்டவராக தனது இறுதிக் காலம் வரையும் வாழ்ந்து காட்டியவர்.

சுயநலம் பாராது பொதுநலனுக்காக உழைத்தார். அன்னாரது பிரிவு அணைந்தும் அணையாத சுடர்விளக்காக பிரகாசித்துக் கொண்டே எம்மவர் முன் ஒளி கொடுத்துக் கொண்டு இருக்கின்ற ஒரு உத்தமனாவார்.

அவருடைய தனித்துவமான தன்மைக்கு எடுத்துக்காட்டாக தான்தோன்றீஸ்வரப் பெருமான் குடமுழுக்கு கண்டு 1998ஆம் ஆண்டில் இரு தேர்களும் ஓடவிடப்படவேண்டும் என்று உறுதியுடன் நின்று பாடுபட்ட பெரியாராவார். காட்சிக் கூடத்திற்கு அனுப்பவேண்டிய சித்திரத் தேரதனை ஓடவிட்ட பெருமையும் அன்னாரையே சாரும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு இணங்க அன்னாரது ஆத்மா தான்தோன்றீஸ்வரப் பெருமானின் பாதடிகளிலே காணிக்கையாக சேர்ந்தார்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய நாமும் பிராத்திப்போமாக
சுபம்! சுபம்!! சுபம்!!!

**திரு.பூ.சுரேந்திரராஜா** (ஆசிரியர்)
கலிங்ககுல நிருவாகம், ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்
கொக்கட்டிச்சோலை.

# கர்மவீரன் கதிராமப்போடி (கொழும்பார்)

கொக்கட்டிச்சோலை அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகராகிய தான்தோன்றீஸ்வரப் பெருமானின் ஆலய வண்ணக்கராக இருந்த கொழும்பார் என்று அனைவராலும் அறியப்பட்ட கதிராமப்போடி வண்ணக்கரின் காலப்பகுதி ஒரு முக்கிய காலகட்டமாயிருந்தது என்று கூறுதல் ஒரு மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல.

இவர் அம்பிளாந்துறையைப் பிறப்பிடமாக் கொண்டிருந்தார். அரசடித்தீவை உறைவிடமாக்கிகொண்டவர். கதிராமப்போடி என்பதைவிட 'கொழும்பார்' என்னும் பெயரையே தன் சிறப்புப்பெயராக நிலைநிறுத்திக்கொண்டவர்.

## ஒரு புரட்சிகர எண்ணமும் செயல்பாடும் கொண்டவர்

இவர் மட்டக்களப்பு ரவுணில் கிறிஸ்த்வ மிசனறிகளின் பள்ளியில் 1930 களின் நடுப்பகுதியிலிருந்து 1940 களின் முன்பகுதி வரை கல்வி கற்றவர். கிறிஸ்தவரல்லாத பலமாணவர்களும் அங்கு கிறிஸ்த மதப்பிரார்த்தனைக்கு கிறிஸ்தவ குருவானவரால் அழைத்துச் செல்லப்படும் போது இவர் மட்டும் அங்கு போகமாட்டேன் என்று அடம்பிடித்து நிற்பாராம். 19ம் நூற்றாண்டில் அம்பிளாந்துறையில் வன்னியனராக இருந்த புகழ்மிக்க கதிராமப்போடி வன்னியனின் பரம்பரையைச் சேர்ந்தவர்களே இவரது முன்னோர்கள் படிக்கும் காலத்திலேயே இவர் ஒருமுற்போக்காளராக இருந்தமையாலேயே இவருக்கு கொழும்பார் என்னும் சிறப்பு பெயர் ஏற்பட்டது. அப்பெயராலேயே மக்களிடையே அறியப்பட்டார்.

22.09.1963ல் நடந்தேறிய ஆலய தேசமகா சபைக் கூட்டத்தில் இவர் வண்ணக்கராக தெரிவு செய்யப்பட்டார். படையாண்ட தெரிவு செய்யப்பட்டதும் தமது சுறுசுறுப்பான முற்போக்குச் சிந்தனையை செயல்படுத்த முற்பட்டார். கோயில் கொடிஸ்தம்பத்திற்கு செப்புக்கவசமிடும் வேலையை ஆரம்பித்து 1965லேயே முடித்தார். ஆலயத்தின் புறவீதி மதில்கள் பல ஆண்டுகளாக இடிந்து தரைமட்டமாக காணப்பட்டதனை மீளவும் புதிதாகக் கட்டி புறவீதியினையும் ஒரு கட்டமைப்பின் கீழ்க்கொண்டு வந்தார்.

## தாந்தாமலை ஆலய நிருவாகசபையின் முதல் செயலாளர்

1960களின் முதற்பகுதியின்போது ஆரம்பிக்கப்பட்ட முதல் நிருவாக சபையில் செயலாளராக தெரிவு செய்யப்பட்ட செயலாற்றினார். இக்காலத்திலேயே

கொத்துப்பந்தலாக இருந்த கோயில்கள் கற்கட்டிடங்களாக மாறின இங்கு பல குடிநீர்க்கிணறுகளையும் கட்டி அடியார்களின் தண்ணீர்க் கஸ்டத்தினைப் போக்க நடிவடிக்கை எடுத்தார். பின் 70 களின் நடுப்பகுதியில் மீண்டும் நிருவாக சபைமுறை மாறி வண்ணக்குமார் வசம் கோயில் நிருவாகம் வந்தது. இக்காலத்தில் முருகன் ஆலயம் செல்லும் மலைப்படிக்கட்டுக்கள் மற்றும் ஆலய முன்னேற்றம் சம்மந்தமான வேலைகளையும் மேற்கொண்டார். கோயில்களின் கட்டுமானப் பணிகளின் குறைவேலைகளும் முடிக்கப்பட்டன.

தான்தோற்றீஸ்வரர் கோயில் 76 பிற்பகுதியில் நடந்த ஒரு அசம்பாவித சம்பவத்தினை தொடர்ந்து வண்ணக்குமாரையும் உள்ளடக்கியதான ஒரு நிருவாக சபை 24.11.76ல் அமைக்கப்பட்டு பின் அச்சபையின் செயலாளராக நியமிக்கப்பட்டார். 1978 புயலின் பின் கோயில் கர்ப்பக் கிருகத்தில் ஆரம்பித்து புதிதாகக்கட்ட வேண்டுமென்றே தீர்மானம் பொதுச் சபையில் கொண்டு வரப்பட்ட போது பலர் இதனை எதிர்த்தனர். ஆனால் கொழும்பாரோ தீர்மானத்தை ஆதரித்துச்செயல்பட்டார். தொடர்ந்து சிற்பாசாரி பார்க்க யாழ்ப்பாணம் சென்ற குழுவிலும் இடம்பெற்றார்.

இன்னுமொரு முக்கிய சம்பவத்தினையும் இங்கு குறிப்பிட வேண்டும் 11.06.1979ல் கோயில் புதிதா அமைக்க வாலஸ்தாபன நிகழ்வு நடைபெற்றபோது வண்ணக்குமாரில் கொழும்பார் மட்டும் சமுகமளித்திருந்தார். மற்ற இருவரும் வரவில்லை இவரும் வராமல் இருந்திருந்தால் அன்று வாலஸ்தாபனமும் நடந்திருக்காது கோயில் கட்டும் வேலையும் நடந்திருக்காது.

கோயில் அமைப்பு வேலை தொடங்கியதும் அதற்கான கட்டுமான வேலைகளைப் பார்ப்பதிலும், தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதிலும் மும்முரமாக உழைத்தவர். 1987 தொடக்கத்தில் முதல் முறையாக அரச படைகள் வந்து அசம்பாவிதங்கள் நடந்த பின் மூன்று நாட்கள் மட்டும் கோயிலுக்கு மக்கள் செல்லவில்லை அத்தகைய நிலையிலும் ஆலயத்திற்கு சென்று பூசைகளை முறையாக நடப்பித்தவர் இவர்மட்டும்மே

கோயில் மூலஸ்தானம் மட்டுமே புதுப்பிக்கப்பட வேண்டுமென்பதே ஆரம்பத்தில் நோக்காக இரந்தது. ஆனால் ஆலயத்தின் சகல பிரகார ஆலயங்களையும் முன் மண்டபத்தினையும் புதிதாக அமைக்க வேண்டும் என்று இவர் முனைப்பாகச் செயற்பட்டார். மற்றவர்கள் மனத்தில் இப்பெரும்பணியை எப்படி நிறைவேற்றுவது என்ற எண்ணம் இருந்தபோது இவர் மட்டும் துணிந்து நின்று செயல்பட்டார். தான்தோன்றீஸ்வரப் பெருமான் எதற்கும் வழி காட்டுவார் என்பதே அவரது முடிவாக இருந்தது. சுமார்

15000/= ரூபா மட்டுமே ஆரம்பத்தில் கையிருப்பாக கோயிலில் வேலை தொடங்கும் போது இருந்தது முடிக்கபட்ட போது ரூபா ஐம்பத்தைந்து லட்சத்திற்கு மேல் (5500000/=) ஆகியிருந்தது கொழும்பாரின் இடைவிடாத ஊக்கமே இப்பணி நிறைவேற ஆதாரமாக இருந்தது என்பதில் எவ்வித ஐயமுமில்லை பல சந்தர்ப்பங்களில் நிருவாக சபையினரின் துணையின்றி தனித்து நின்றும் இவற்றை நிறைவேற்றினார்.

தமது உடல் தளர்ந்த வயதிலும் கோயில் கும்பாபிஷேகம் முடிந்த பின்பே மறு வேலைகள் என்று இடைவிடாது செயல்பட்டவர். அஞ்சா நெஞ்சர் பெரும்துணிவுடன் செயல்பட்டவர். இவரிடமிருந்து நான் பல சிறந்த பண்புகளை பயின்றுள்ளேன். அவரைப்போல் துணிவுடன் செயல்பட்டவரை நான் மண்முனைப்பகுதியில் கண்டதில்லை. அவர் இன்று மறைந்து விட்டாலும் அவரின் நினைவுகள் அவருடன் பழகியவர்களிடமிருந்து மிக விரைவில் மறைந்து விடாது. அவரைப்போல் ஒரு வண்ணக்கா் தான்தோன்றீஸ்வரா் கோயிலுக்கு இனிக்கிடைக்குமா என்பது தான்தோன்றீஸ்வரப் பெருமானுக்கே தெரியும் அன்னாரது ஆன்மா பெருமானது பாதக்கமலங்களையடைந்திருக்குமென்பதில் சந்தேகமில்லை அவரின் நினைவுகள் பலர் மனதிலும் பல்லாண்டுகள் நிலைத்திருக்கும் அன்னாரை அன்புடன் நினைவுகூரும்

அன்பன்

**ஞா.சிவசண்முகம்**



# "பூர்வ புண்ணியம் செய்த மாமனிதன்"......

நமது பிரதேசத்தில் பொதுப்பணியில் ஆர்வமுள்ளவர்களை காண்பது மிக அருமை. .இத்தோடு ஆளுமையும், ஆற்றலும் நிறைந்த தலைமைத்துவத்திற்குப் பொருத்தமானவர்கள் நம்மிடையே மிகக்குறைவாகக் காணப்படுவது நமது முன்னேற்றத்திற்கு பெருங்குறையாகவும் உள்ளது. இத்தகையோர் இடையிடையே ஒருசிலர் மாத்திரம் நம்மவர் மத்தியில் வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் அமரர் தன்மப்போடி கதிராமப்போடி அவர்கள். இவர் அகவாழ்க்கையிலும், புறவாழ்க்கையிலும் வெற்றிகொண்ட ஒரு மனிதர்.

இவரது இல்லறவாழ்க்கையில் தமது மக்களை நல்லபடி உருவாக்க வேண்டுமென எண்ணிப் பாடுபட்டவர். தான் பெற்றெடுத்த பிள்ளைகளையெல்லாம் வாழ்விக்கும் முயற்சியில் இவர் வெற்றியும் பெற்றார். பிள்ளைகளுக்கு வீடுகட்டிக் கொடுத்தல், தொழில் பெற்றுக் கொடுத்தல், திருமணம் செய்து வைத்தல் இவையெல்லாம் இவரால் ஒழுங்காகச் செய்யப்பட்டன. இவற்றையெல்லாம் நோக்கும்போது இவரது அகவாழ்க்கை வெற்றிகரமாக அமைந்தமையை நோக்கமுடிகிறது.

இவரது புறவாழ்க்கையைப் பொறுத்தமட்டில் சொந்தவாழ்க்கையைக் காட்டிலும் பொதுவிடயங்களுக்கு இவர் செலவிட்டநேரம் அதிகம். அதிலும் குறிப்பாக இவரது பொதுப்பணிகளை திருக்கோயில்ப் பணிகளாகவே பெரிதும் காணலாம். மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் உயர்ந்த கோயில்களாகப் போற்றப்படும் சைவப் பேருலகு நன்கறிந்த கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமும், தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயமும் இவரது திருப்பணிகளைப் பெரிதும் பெற்றன. இவ்விரு கோயில்களும் நிலைத்திருக்கும் வரை அமரர் கதிராமப்போடி அவர்களின் பெயரும் நிலைத்திருக்கும் எனலாம். இவற்றைவிட அரசடித்தீவு கோயிலுக்கு இவர் ஆற்றிய பணிகள் என்றும் நினைவுகூரத்தக்கன.

ஒரு மனிதனுக்கு பொதுப்பணி செய்ய வாய்ப்புக் கிடைப்பதென்றால் அது முற்பிறப்பில் செய்த புண்ணியத்தின் பலன் எனலாம். அதிலும் சமயப்பணி குறிப்பாக சிவபணி வாழ்வு முழுவதும் செய்வதற்கு அமரர் கதிராமப்போடி அவர்களுக்கு கிடைத்த வாய்ப்பு இறைவன் அளித்த வரப்பிரசாதம். இப்பணிகளால் இவர் ஆத்மா சிவகதி அடையும் என்பதில் சந்தேகமில்லை. இவரது ஈடேற்றத்திற்காக எல்லாம் வல்ல தான்தோன்றீஸ்வரப் பெருமானைப் பிரார்த்திப்போமாக. மேலும் இவரது பிரிவால் துயருறும் இவரது குடும்பத்தார் சோகத்தில் இப்பிரதேச மக்கள் அனைவரும் இணைந்துகொள்வோமாக.

ஓம் சாந்தி

**சி. அகிலேஸ்வரன்**

முன்னாள் ம.தெ.மே.பிரதேசசபைத் தலைவர்,
அதிபர், மட்/மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம்

## அமரர்.த.கதிராமப்போடி (J.P) வண்ணக்கர்
# ஒரு ஆத்மீக சாதனையாளர்

"தோன்றில் புகழோடு தோன்றுக அ∴திலால்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்னும் தெய்வப் புலவரின் வாக்கிற்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர் அமரர்.கதிராமப்போடி வண்ணக்கர் அவர்கள்

உலகத்திலே எத்தனையோ மனிதர்கள் பிறக்கின்றனர், வாழ்கின்றனர், இறக்கின்றனர், நீர்க்குமிழி போல மறைகின்றனர் அவர்கள் இறந்த பின்னர் அவர்களுடைய அடையாளமே தெரியாமல் போய்விடுகின்றது. ஆனால் வண்ணக்கர் அவர்கள் இந்தப் பிரதேசத்திலே ஒரு சரித்திர புரிசராக வாழ்ந்து காட்டியுள்ளார். ஆத்மீக ரீதியிலே சாதனை படைத்துள்ளார். என்று கூறுவதில் எந்த விதமான மாற்றுக்கருத்துக்கும் இடமில்லாத அளவுக்கு சேவை புரிந்த பெருமகன்.

மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக நிருவாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலே மிக நீண்ட காலம் குறிப்பாக முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக ஆத்மீகப் பணியிலே ஈடுபட்ட பெருந்தகை இவராவார். பல மனிதர்கள் தனது வாழ்நாள் முழுவதையும் தங்களுக்காக மட்டுமே செலவு செய்யும் இக்காலகட்டத்தில் இவர் தனது வாழ்நாளில் அரைவாசிப் பகுதியை பிறருக்காக அதுவும் ஆத்மீகத் துறையோடு தொடர்பு படுத்தி செயற்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

"மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என எண்ணிய இவர் இப்பிரதேசத்தில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களான பண்டாரியாவெளி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபையில் தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலன சபையில் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபையில். செயலாளராகவும் அரசடித்தீவு ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலய பரிபாலன சபையில் இருந்து பல வருடங்கள் தொண்டாற்றியிருக்கின்றார்.

18 வருடங்களுக்கு மேலாக இடிக்கப்பட்ட நிலையில் இருந்த ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தை கும்பாபிசேகம் செய்வித்த முன்னோடிகளில் இவருடைய செயற்பாடு முக்கியமானது அதே போன்று ஓட முடியாதிருந்த சித்திரத்தேரை மிகக் குறைந்த செலவில் திருத்தம் செய்து ஓடவைத்த பெருமையும் இவரையே சாரும்.

திடமான தீர்மானம் துணிச்சலான செயற்பாடு, விடாமுயற்சியும் இவருடைய செயல்கள் வெற்றி பெறுவதற்கு உறுதுணையாக இருந்துள்ளது.

இறைவன் இவர்மேல் விருப்பமுடையவராக இவரால் தனக்குரிய காரியங்களை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்னும் உடையவராக இருந்திருக்க வேண்டும் அதனால் தான் இவருக்கு அக்காரியங்களை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய ஆற்றலையும் அறிவையும் கொடுத்து அவர் மூலமாக தனக்குரிய காரியங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்.

இவருடைய உடல் எமது மத்தியில் இல்லையே தவிர இவர் இப்பிரதேச மக்களுக்கு செய்த ஆத்மீக ரிதியான தொண்டுகள் சேவைகள் எம்மை விட்டு ஒரு காலமும் மறையாது பிரியாது.

எதிர்காலத்திலே பல தலைமுறையினர் உதாரணமாகக் கொள்ளக்கூடிய அளவுக்கு இவரது சேவை வேரூன்றியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழ்கின்ற சைவப் பெருங்குடி மக்களின் நெஞ்சங்களில் வாழ்கின்ற ஒரு பெருந்தகை இவரது சேவையைப் பாராட்டி சிவநெறிச் செம்மல்" என்ற பட்டத்தையும் இந்து கலாச்சார அமைச்சு வழங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படுவர்"

இவரது ஆத்மா என்றென்றும் இறையடியில் இருக்க இறைவனை வேண்டுகின்றேன்.

நன்றி

**திரு.பொ.நேசதுரை** (அதிபர்) தலைவர்
ஸ்ரீ சித்தி விநாயகர்,
ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆ.ப. சபை
மகிழடித்தீவு.

# சிவத்துள் கலந்த சிவபணியாளன்
# (அமரர்.த.வ.வி. கதிராமப்போடி வண்ணக்கர் அவர்கள்)
# (இரங்கல் உரை 30.11.2006 அன்று)

சோகமே வடிவான சொந்தங்களே!

மட்டக்களப்பின் தென்மேற்கே வாவிக்கப்பால் வளம் கொழித்து நிற்கும் மன்முனைப்பிரதேசம் இன்று சோபை இழந்து துக்கத்தால் துவண்டு நிற்கிறது காரணம் ஈழத்திருநாட்டின் புகழ்பெற்ற ஈச்சுரங்களில் ஒன்றான தான்தோன்றீச்சுரத்தில் சுமார் 35 ஆண்டுகளுக்கு மேலாக சமய, சமூக பணிகளில் ஈடுபட்டு புகழ் பூத்த வண்ணக்கராக தனது இறுதிக் காலம் வரை பணி செய்த சிவபணியாளனை நாம் இழந்து நிற்கின்றோம். இவரது இழப்பு காலம் இட்ட கட்டளையாக இருந்தாலும் ஞாலத்தில் அவர் பெருமையை எண்ணிப்பார்க்கும் தருணமாக இது தோன்றுகின்றது.

அமரர். த.வ.வி கதிராமப்போடி அவர்கள் மண்முனை இராச தானியாக வாழங்கிய அக்காலத்தில் வன்னிமை காத்து வளமூட்டிய அம்பிளாந்துறை கிராமத்தில். அமரர்கள் தன்மப்போடி குஞ்சிநாச்சிப்பிள்ளைக்கு மூத்த பிள்ளையாக அவதரித்தார். விதிவசத்தால் அரசடித்தீவு எனும் அழகிய கிராமத்தில் அன்பு மனையாளாக நல்லம்மா எனும் நல்மகளை கரம்பிடித்து இல்லறத்தை நல்லறமாக நடத்தும் காலத்தில் அவர்செய்த பணிகளை நாம் எண்ணிப்பார்கின்றோம்.

சிவநெறிச் செம்மல் கதிராமப்போடி அவர்கள் ஒரு சிவபக்தர் வெள்ளை நிறவேட்டியும் சால்வையும் அணியும் வளக்கமுள்ளவர். கொக்கட்டிச்சோலை கோயில் வளாகத்திலே நிற்கும்போது வாண்மை மிக்க வண்ணக்கராகவே எப்பொழுதும் காட்சி தருவார். இவரிடம் நேரிய பார்வை நீண்ட தொலைநோக்கு என்பன இருந்தது என்றே கூறலாம். ஏனெனில் 1978ம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் வீசிய கொடிய சூறாவளி தான்தோன்றீசுவரத்தையும் விட்டு வைக்கவில்லை. இதனால் இங்கே இருந்த மூலமூர்த்தியின் தூபி வெகுவாக பாதிக்கபட்டிருந்து இதனை உடைத்து புனர்நிர்மாணம் செய்ய வேண்டிய தேவை இருந்தும் அச்சத்தினால் யாரும் முன்வராத வேளை தன்னுடைய ஆற்றலை சாதுர்யமாக வெளிக்காட்டி மக்களை ஒன்று திரட்டி உடைத்து புனர்நிர்மாண பணிகளை கச்சிதமாக மேற்கொண்டார் வன்முறைகள் தலைதூக்கி இருந்த காலம், பொருட்களை படுவான்கரைக்கு கொண்டு வரமுடியாத நேரம் இவ்வேளை அணுகுவாரோடு அணுகி அன்பை வெளிக்காட்டி செவ்வனே தன் பணியை நிறைவேற்றிய பெருமை இவரையே சாரும் எனலாம்.

அதே போல் சூறாவளியின் பின் (1978) தேரோட்டம் என்ற நிகழ்வை காணாது இருந்த மட்டக்களப்பு தமிழக மக்களுக்கு 1995ம் ஆண்டு காலப்பகுதியில் மீண்டும் தேரோட்டம் காணும் நிகழ்வை ஏற்படுத்திய பெருமை இவரையும், இவர் சார்ந்த நிருவாகத்தையும் சேரும் என்பதை குறிப்பிட்டு கூறலாம். "முடியாது என்று சொல்லாது முடியும்" என்ற சொல்லை நிலை நிறுத்தி முனைப்பாக செயற்படும் பண்பு இவர்களிடத்தே காணப்பட்ட சிறப்பம்சமாகும் இவையெல்லாம் அன்னார் விட்டுச் சென்ற சொத்துக்கள் என்றால் வீண்போகாது எனலாம்.

மேலும் படையாட்சி குலத்தின் பண்பான வண்ணக்கர் கொழும்பார் என்று சிறப்புப் பெயரால் சிறியோராலும், பெரியோராலும் விழித்து பேசப்பட்டு வந்தவர். அமரர்.கதிராமப்போடி என்றால் மிகையாகாது.

மற்றும் கொழும்பார் அவர்கள் தன்செயலிலே "ஆடிய மாட்டை ஆட்டிக்கறக்க வேண்டும் பாடிய மாட்டை பாடிக்கறக்க வேண்டும்" என்ற பழந்தமிழுக்கேற்ப நாசுக்காக செயலில் ஈடுபட்டு வெற்றிகளை நிலை நாட்டிய உன்னத மனிதர் இவர் இன்று நம்மிடத்திலே இல்லையெனும் போது மனம் வெந்து புண்ணாகிறது.

அது மட்டுமல்ல மட்டக்களப்பின் சின்னக் கதிர்காமம் என அழைக்கப்படும் ஸ்ரீ தாந்தாமலை முருகன் ஆலயத்திற்கு சிறிது காலம் தலைவராக இருந்து தன்பணியை மிகவும் சிறப்பாக செய்திருக்கிறார். மேலும் தான் வாழ்ந்த கிராமமான அரசடித்தீவு கிராமத்திலே எழுந்தருளி இருக்கின்ற விக்கினேஸ்வரர் ஆலயத்திலே செயலாளராக இருந்து நிகரில்லாத அறப்பணிகளை மேற்கொண்டிருக்கிறார். அத்தோடு கிராமோதய சபை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பவற்றில் ஈடுபட்டு சமூக, கல்விப்பணிகளை மிகவும் உன்னிப்பாக மேற்கொண்டிருக்கிறார். என்றால் இவரது சேவைகளை பாராட்டாமல் இருக்க முடியாது.

சிறு வயதில் இருந்தே ஒரு சிறந்த விவசாயியாக தந்தை வழி உருவாக்கப்பட்டு ஒருவட்ட விதானையாக விவசாயத்துறையில் வளர்ந்துள்ளார். இதனால் நிலச்சுவாந்தராக உயர்த்தப்பட்டு நல்ல பொருளீட்டங்களை தேடி போடியாராகவும் வாழ்க்கையை கொண்டு சென்றார் என்பதை நம் சமூகம் நன்கறியும். இல்லற வாழ்க்கையில் நவரத்தினங்கள் போன்று ஒன்பது பிள்ளைகளை பெற்று மதிப்பு மிக்க குடும்ப பின்னணியை உருவாக்கிவிட்டிருக்கிறார். இதனால் இவர் ஒரு சிறந்த கனவான் என்றே குறிப்பிடலாம்.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"


என்ற திருவள்ளுவர் கூற்றுப்படி

இன்று பிள்ளைகள் உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் முந்தி இருக்கிறார்கள். இதனால் அவர் தேடிய சொந்தங்கள் கூடியழுகின்ற காட்சி எம்மையெல்லாம் மெய்சிலிர்க்க வைக்கின்றது.

அமரர்.த.வ.வி கதிராமப்போடி அவர்களின் உடலம் தாங்கிய பேழை இன்னும் ஒரு சில மணி நேரத்தில் இறுதி யாத்திரையோடு, அக்கினிக்கு சமர்ப்பணம் செய்யப்பட விருக்கிறது. இந்த நிகழ்விலே கலந்து கொண்டிருக்கின்ற அன்பர்கள், பெரியோர்கள், கல்விமான்கள் எல்லோரும் அன்னார் விட்டுச் சென்ற பணிகளை முன்னெடுத்து செல்ல வேண்டும் என்று விநயமாக கேட்டு அன்னாரின் ஆத்மா சாந்தி வேண்டி தான்தோன்றீஸ்வரப் பெருமானை பிரார்த்திப்போமாக

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**திரு.த.தியாகராஜா** (அதிபர்)
செயலாளர்.
கலிங்ககுல திருப்பணிச்சபை,
தான்தோன்றீஸ்வரர் ஆலயம்,
கொக்கட்டிச்சோலை.



# த.வ.வி எனும் ஒரு மானிடன்

எங்க குலத்தின் நாயகன் குல விளக்கு எங்களை விட்டு பிரிந்து இறைவனது திருக்கமலங்களைச் சேர்கின்றது எந்த வேலையையும் மன உறுதியுடன் படையாட்சி குலத்திற்காக மட்டுமன்றி அனைவருக்குமாக மேற்கொண்ட அன்பு சிவநெறிச் செம்மல் அணையாமல் அணைந்து செல்கின்றது. அன்னாரது பணி சிறப்பாக அமைவதற்கு தான் பிறந்த அம்பிளாந்துறை மண்ணும் மனைதாரமேற்ற அரசடித்தீவு மண்ணுமே காரணம் எனலாம்.

இவரது கல்வி அறிவு காரணமாக அரசடிதீவு, தாந்தாமலை, நாகதம்பிரான் ஆலயங்களில் செயலாளராகவும் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் எங்கள் படையாட்சி குலம் சார்பாக செயலாளராகவும், வண்ணக்கராகவும் பங்கு கொண்டு அறப்பணி தனை ஆலயத்திலும் சமூகத்திலும் மேற்கொண்டவர். அந்தப்பணி அவரைச் சமூக சேவகனாக மாற்றியதோடு "சிவநெறிச் செம்மல்" என்ற பட்டத்தையும் பெற்றுக் கொடுத்தது. இவரது ஆலய சேவையை கௌரவித்து பல கௌரவங்கள் பலமேடைகளில் வழங்கப்பட்ட போது இவ்விருது மிக உயர்ந்த விருதாகும்.

எங்கள் படையாட்சி குலத்தின் தலைவர் குலமுறை கூறி குலத்திற்காக சிறப்பாகப் பங்காற்றியவர். எங்கள் குலமடம் என்றும் இவரை நினைவு கூரும் எந்த சேவையும் மக்களுக்காக இடம்பெற வேண்டும் என்பதற்காக தனது வாழ்நாளை அதற்காகவே அற்பணித்தவர் தாந்தாமலை முருகன் ஆலய படிக்கட்டை கட்டியதோடு அவற்றைகச் சீர் செய்து மலையின் உச்சியில் அமர்ந்துள்ள பிள்ளையார் அப்பரை வழிபடச் செய்த பாக்கியவான் எங்கள் இறை கொண்டான் த.வ.வி.

தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் தனது இறுதிக்காலம் வரையும் சேவை செய்தவர். நோயால் பீடிக்கப்பட்டு சில காலம் இருந்த போதும் அந்த நோயையும் பாராமல் அந்த வேளையிலும் ஆலயம் சிறப்பாக அமைய வேண்டும், செயற்பாடுகளைப் பேண வேண்டும் என்ற சிந்தனையுடன் இருந்தமகான் இன்று இறைபதம் அடைந்துள்ளார். அவரது சமூகப்பணி எம்மைவிட்டு ஒருகாலும் அகலாது அன்னாரது பிரிவுத்துயரில் பங்கேற்று துயருறும் குடும்பத்தார்க்கும், பொதுமக்களுக்கும் எங்கள் படையாட்சி குலமக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இ.பிரதீஸ்குமார்** (செயலாளர்)
**இ.லோகிதராசா** (பொருளாளர்)
**படையாட்சிகுடி மக்கள் சார்பாக**
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்
கொக்கட்டிச்சோலை.

# பிள்ளையார் கதை

மந்தர கிரியில் வடபா லாங்கோர்
இந்துவளர் சோலை யிராசமா நகரியில்
அந்தண னொருவனு மாயிழை யொருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவு ளாலயமுங் கடிமலர்ப் பொய்கையுந்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்பா சீன்ற
மதர்விழி பாகனை வழிபடு நாளின்
மற்றவர் புரியும் மாதவம் கண்டு
சிற்றிடை யுமையாள் சிவனடி வணங்கிப்

பரனே சிவனே பல்லுயிர்க் குயிரே
அரனே மறையவர்க் கருள்புரிந் தருளென
அந்த வந்தணனுக் கிந்தப் பிறப்பின்
மைந்த ரில்லையென்று மறுத்தர னுரைப்ப
எப்பரி சாயினு மெம்பொருட் டொருசுதன்
தப்பிலா மறையோன் தனக்கருள் செய்கென
எமையா ளுடைய வுமையாண் மொழிய
இமையா முக்க ணிறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதைமை யென்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கி

பேதாய் நீபோய்ப் பிறவென மொழிய
மாதுமை யவளும் மனந்தளர் வுற்றுப்
பொன்றிடு மானிடப் புன்பிறப் பெய்துதல்
நன்றல வென்றே நடுக்கமுற் றுரைப்பக்
கறைமிடற் றண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுத லவற்குநீ பிள்ளை யாகச்
சென்றவண் வளர்ந்து சிலபகற் கழிந்தால்
மன்றல்செய் தருள்வோம் வருந்தலை யென்று
விடைகொடுத் தருள விலங்கன்மா மகளும்
பெடை மயிற்சாயற் பெண்மக வாகித்

தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற் றுதித்துப்
பாவை சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற வியல்பின ளாகி
ஐயாண் டடைந்தபின் னன்னையு மத்தனும்
மையார் கருங்குழல் வாணுத றன்னை
மானுட மறையோற்கு வதுவை செய்திடக்
கானமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்பிறப் பில்லாப் பெரியோற் கன்றி
அறத்தகு வதுவைக் கமையேன் யானென

மற்றவன் றன்னையுன் மணமக னாகப்
பெற்றிட லரிதெனப் பெயர்ந்தவர் பேச
அருந்தவ முயற்சியா லணுகுவே னியானெனக்
கருந்தட நெடுங்கட் கவுரியங் குரைப்ப
மருமலி கமல மலர்த்தடத் தருகிற்
தருமலி நிழற்றவச் சாலைய தமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழலுமை யருந்தவம் பயிற்ற
அரிவைத னருந்தவ மறிவோம் யாமென
இருவரு மறியா விமையவர் பெருமான்

மானிட மேந்தும் வண்ணம தொழித்து
மானிட யோக மறையவ னாகிக்
குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயி றவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்ணறுங் கூந்தற் றையலை நோக்கி
மின்பெறு நுண்ணிடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவமிங் கியற்றுவ தென்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூடவென் றுரைத்தலும்
நன்றெனச் சிரித்து நான்மறை யோனும்

மாட்டினி லேறி மான்மழுத் தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துட னாடிப்
பாம்பு மெலும்பும் ப.்றலை மாலையுஞ்
சாம்பரு மணிந்து தலையோ டேந்திப்
பிச்சைகொண் டுழலும் பித்தன் றன்னை
நச்சிநீர் செய்தவம் நகைதரு நுமக்கெனப்
பூங்கொடி யருந்தவம் பூசுரன் குலைத்தாலும்
ஆங்கவ ணாணமுற் றணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுத லொழிகென மனமிகத் தேற்றிச்

சிந்துர வாணுதற் சேடியர் சிலர் போய்த்
தந்தைதா யிருவர் தாளிணை வணங்கி
வாவிக் கரையில் வந்தொரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றின னென்றலுந்
தோடமர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத் தனிமனை கொணர்கென
மாடக யாழ்முரல் மங்கைய ரோடி
நீடிய புகழாய் நீயெழுந் தருளென
மைம்மலர்க் குழலி வந்தென்னை யழைக்கில்
அம்மனைப் புகுவனென் றந்தண னுரைத்தலும்

பொற்றொடி நீபோய்ப் பொய்கையி னின்ற
நற்றவ முனியை நடத்திக் கொணர்கென
சிவனை யிகழ்ந்த சிற்றறி வுடையோன்
அவனையான் சென்றிங் கழைத்திடே னென்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுக னோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக் கல்லதென்
பொற்பமர் கொங்கை பொருந்துதற் கரிதால்
மானிட வேட மறையவன் றனக்கு
யான்வெளிப் படுவ தில்லையென் றிசைப்ப

மனையிடை வந்த மாமுனி தன்னை
இணையடி தொழுத லிளையோற் கியல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுத லொழிந்து
தாய்சொன் மறுத்தல் பாவமென் றஞ்சி
ஆயிழை தானு மவனெதிர் சென்று
சுற்றிவந் தவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் றன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற் கன்ப னாகும்
வேதியன் பழைய விருத்தனென் றெண்ணி

ஆசனம் நல்கி யருக்கிய முதலாப்
பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி யழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் றன்னை அமுதுசெய் வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தற்கோ லத்தொடு சாதிக் காயும்
கர்ப்பூ ரத்தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை யடைக்காய் விளங்கிய பொன்னின்

ஒள்ளிய தட்டி லுகந்துமுன் வைத்து
சிவனெனப் பாவனை செய்து நினைந்து
தவமுறை முனிவனைத் தாளினை வணங்கத்
தேனமர் குழலி திருமுக நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியி னயனமும் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத் திலங்கக்
கூன்மதி நிலவு கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில காணக்

கரந்ததன் னுருவங் காட்டிமு னிற்ப
மரகத மேனி மலைமக டானும்
விரைவொடங் கவனடி வீழ்ந்திறைஞ் சினளே
அரியய னிந்தர னமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவ ரவுண ரிராக்கதர்
பூத ரியக்கர்கிம் புருட ரலகை
சித்தர் தாரகைந் திருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினெண் கணத்தி லுள்ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந் ததற்பின்

மன்றலங் குழலிக்கு வதுவைநாட் குறித்துத்
தென்றல்வந் திலங்கு முன்றி லகத்துப்
பொன்றிகழ் பவளப் பொற்கா னாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொற் றகட்டா லழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பத்திக டோறும் பலமணி பதித்துத்
தோரண நாட்டி துகில்விதா னித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறுந் திருவிளக் கேற்றிப்

பத்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியு நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர் சோடித்து
நலமிகு கைவலோர் நஞ்சணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளீர் மலைமக டன்னைத்
திருமணக் கோலஞ் செய்தன ராங்கே
எம்பிரானையு மிளங்கொடி தன்னையும்
உம்பர் எல்லாம் ஒருங்குடன் கூடிக்
கடலென விளங்குங் காவணந் தன்னிற்

சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையின்
மறைபுகழ்ந் தேத்த மகிழ்ந்துட னிருத்திப்
பறையொலி யோடு பனிவளை யார்ப்ப
வதுவைக் கேற்ற மறைவிதி நெறியே
சதுமுக நோமச் சடங்குக ளியற்றத்
தறுக லற்றொளி பொற்றாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ வெரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதணி கருங்குழற் பூவைதன் னுடனே

ஒதநீர் வேலைசூ ழுஞ்சையம் பதிபுக
ஏரார் வழியி னெண்டிசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீயென்
வருங்கருங் குழலாண் மற்றுமுண் டோவெனத்
திருந்திழை மடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும் பிடியுங் கலந்துவிளை யாடல்கண்
டொளிர்மணி பூணா ளுரவோ னுடனே
இவ்வகை யாய்விளை யாடுவோ மீங்கென
அவ்வகை யரனு மதற்குடன் பட்டு
மதகரி யுரித்தோன் மதகரி யாக

மதர்விழி யுமைபிடி வடிவம தாகிக்
கூடிய கலவியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தழல் வேள்வியே தாகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல வரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையோ
டைங்கர தலமு மலர்ப்பத மிரண்டும்
பவளத் தொளிசேர் மைந்துவர் வாயுந்

தவளக் கிம்புரித் தடமருப் பிரண்டுங்
கோடி சூரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோ லகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியி னயனமு முப்பரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீண் முடியுந்
தங்கிய முறம்போற் றழைமடிச் செவியுமாய்
ஐங்கரத் தண்ணல் வந்தவ தரித்தலும்
பொங்கர வணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்திட னோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனும்

மண்ணு ளோர்களும் வந்துனை வணங்க
ஆங்கவர் தங்கட் கருள்சுரந் தருளி
தீங்கது தீர்த்துச் செந்நெறி யளித்துப்
பாரண மாகப் பலகனி யருந்தி
ஏரணி யாலின்கீ ழினிதிரு வென்று
பூதலந் தன்னிற் புதல்வனை யிருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்தினி திருந்தபின்
வானவ ராலு மானுட ராலுங்

கானமர் கொடிய கடுவிலங் காலுங்
கருவிக ளாலுங் கால னாலும்
ஒருவகை யாலு முயிரழி யாமற்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத் தடற்படை சூழக்
கைம்முகம் படைத்த கயமுகத் தவுணன்
பொன்னுல கழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை யிடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண் டேங்கி

அடுந்தொழிற் குலிசத் தண்ணலு மமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புர மெரித்தோன்
அஞ்சலீ ரென்றவர்க் கபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத் தண்ணலை நோக்கி
ஆனைமா முகத் தவுணனோ டவன்றன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்றுவா வென்று விடைகொடுத் தருள
ஆங்கவன் றன்னோ டமர்பல வுடற்றிப்

பாங்குறு மவன்படை பற்றறக் கொன்றபின்
தேர்மிசை யேறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றைவெண் மருப்பை யொடித்தவ னுரத்திற்
குற்றிட வெறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்தவன் வீழ்ந்து துண்ணென வெழுந்து
வாய்ந்தமூ டிகமாய் வந்தவன் பொரவே
வந்தமூ டிகத்தை வாகன மாக்கி
எந்தை விநாயக னேறின னிப்பால்
எறிந்தவெண் மருப்பங் கிமைநொடி யளவிற்

செறிந்தது மற்றவன் றிருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத் தருளும்
வல்லவை தனைத்தன் மனையென மணந்தே
ஓகையொ டெழுந்தாங் குயர்படை சூழ
வாகையம் புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்சங் கோட்டிக் கயல்முக கேறுந்
திருச்செங் காட்டிற் சிவனை யர்ச்சித்துக்
கணபதீச் சரமெனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமன மகிழ

இங்குவந் தன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக் காசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற் றிருந்திட வாங்கே
தேவர்கள் முனிவர் சித்தர் கந்தருவர்
யாவரும் வந்திவ ணேவல்செய் திடுநாள்
அதிகமா யுரைக்கு மாவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
நோற்று நற்பூசை நுடங்கா தாற்றிப்
போற்றி செய்திட்டார் புலவ ரைங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே

நிருமலன் குமர னிருத்தம் புரிந்தான்
அனைவருங் கைதொழு தடியினை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக் கதனால்
பேழைபோல் வயிறும் பெருத்த காத்திரமுந்
தாழ்துளைக் கையுந் தழைமுறச் செவியுங்
கண்டன னகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றம் குபேரனை நோக்கி
என்னைக் கண்டிங் ககழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவ ருரைக்குமித் தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்

அழிவுமெய் துவரென் றசனிபோற் சபித்தான்
விண்ணவ ரெல்லா மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுளின் தினத்திற
கோரவெஞ் சினமிகக் கொண்டன னந்நாண்
மார்கழித் திங்கண் மதிவளர் பக்கஞ்
சதயம் தொட்ட சட்டிநல் விரதமென்
றிதயத் தெண்ணி யாவரு நோற்றார்
இப்புவி மாந்த ரியம்பிய விரதம்
வைப்புட னோற்ற வகையினிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த

தருமனு மிளைய தம்பி மார்களுந்
தேவகி மைந்தன் றிருமுக நோக்கி
எண்ணிய விரதம் இடையூ றின்றிப்
பண்ணிய பொழுதே பலிப்புண் டாகவுஞ்
செருவினி லெதிர்ந்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வ மெவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக் குரையெனப்
பாட்டாளி துதையும் பசுந்துளாய் மார்பனுங்
கேட்டருள் வீரெனக் கிளர்த்துத லுற்றான்

அக்குநீ றணியு மரன்முத லளித்தோன்
விக்கினந் தீர்க்கம் விநாயக மூர்த்தி
ஓடைவத் திடும்பொன் னொத்தொளி விளங்குங்
கோடி சூரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புய முடையோன்
சறுவா பரணமும் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோ லொருமருப் புடையோன்
ஒருகையிற் றந்தமு மொருகையிற் பாசமும்
ஒரு கையின் மோதக மொருகையிற் செபஞ்செய்

உத்தம மாலையோ னுறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்தி விநாயகன்
என்றிமை யவரும் யாவருந் துதிப்ப
நன்றி தருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர்க் காணப் புறப்படும் போதுஞ்
சேருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோ கங்க ளுஞற்றிடும் போதும்
ஆங்கவன் றன்னை யருச்சனை புரிந்தாற்
றீங்கறா தெல்லாஞ் செயமுண் டாகுங்

கரதல மைந்துடைக் கணபதிக் குரிய
விரமொன் றுளததை விரும்பி னோற்றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத் துண்டாம்
புந்தியி னிணைந்த பொருள்கை கூடும்
மேவலர் தமையும் வென்றிட லாமெனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடு மியல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரித்தெமக் குரைத்திட வேண்டுமென் றிரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துரை செய்வான்

தேருநீ ராவணித் திங்களின் மதிவளர்
பூர்வீக பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறா தியற்றி
அத்தின மதனி லைங்கரக் கடவுளைப்
பத்தியோ டர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்குமங் கவன்றன்
ஒள்ளிய வருட்டிரு வுருவுண் டாக்கிப்
பூசணை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசிலா மண்ணா லமைத்தலுந் தகுமால்

பூசனஞ் செயுமிடம் புனித மாக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடி விதானித்து
நீடிய நூல்வளைஇ நிறைகுடத் திருத்தி
விந்தைசேர் சித்தி விநாயக னுருவைச்
சிந்தையி னினைந்து தியானம் பண்ணி
ஆவாகன முத லாக்கிய பாத்தியம்
வாகா ராச மனம் வரை கொடுத்து
ஐந்தமிர் தத்தா லபிடே கித்துக்
கந்தஞ் சார்த்திக் கணேசமந் திரத்தால்

தசுர புத்திர னென்னுமந் திரத்தான்
மாசக லிரண்டு வத்திரஞ் சார்த்திப்
பொருந்துமை சுதனாப் புகலுமந் திரத்தாற்
றிருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறு குடனிரு பத்தொரு விதமாகப்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசாங் குசகரன்
ஏக தந்த னீசுர புத்திரன்
ஆகு வாகன னருடரு விநாயகன்

சர்வ காரியமுந் தந்தருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி யென்னுநா மங்களால்
ஆரம் பத்துட னர்ச்சினை பண்ணி
மோதக மப்ப முதற்பணி காரந்
தீதகன் மாங்கனி தீங்கதலிப் பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியோடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பாறயிர் போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவுமுன் வைத்து
உருத்திரப் பிரியவென் றுரைக்குமந் திரத்தால்

நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்ற நானான் குபசாரமும்
மற்றவன் றிருவுள மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி யிருபிறப் பாளர்க்
குண்ணறு சுவைதேச ரோதன நல்கிச்
சந்தன முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க் கீந்திட் டருச்சகன் றனக்குத்
திருத்தகும் விநாயகத் திருவுரு வந்தைத்
தரித்தவத் திரத்துடன் றானமாக் கொடுத்து
நைமித் திகமென நவிறரு மரபால்

இம்முறை பூசனை யாவர் செய்தாலும்
எண்ணிய கருமம் யாவையு முடிப்பர்
திண்ணிய செருவிற் செயமிகப் பெறுவர்
அரனிவன் றன்னைமுன் னர்ச்சனை பண்ணிப்
புரமொரு மூன்றும் பொடிபட வெரித்தான்
உருத்திர னிவனை யுபாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை யிவன்றா ளர்ச்சனை பண்ணிப்
பகர்தருங் கணவனைப் பரிவுட னடைந்தாள்
தண்ணார் மதிமுகத் தாடம யந்தி

அன்னா னிவனை யர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவு நளனை யடைந்தாள்
ஐங்கரக் கடவுளை யர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேரறக் களைந்து
தெசரதன் மைந்தன் சீதையை யடைந்தான்
பகிரத னென்னும் பார்த்திவ னிவனை
மகிதலந் தன்னின் மலர்கொ டர்ச்சித்து
வரநதி தன்னை வையகத் தழைத்தான்
அட்டதே வதைகளு மர்ச்சித் திவனை
அட்டபோ கத்துட னமிர்தமும் பெற்றார்

உருக்மணி யென்னு மொண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டுபோ மளவிற் குஞ்சர முகனை
வண்டுபாண் மிழற்றா மலர்கொ டர்ச்சித்துத்
தாரியின் மறித்தவன் றனைப்புறங் கண்டு
யாமுமங் கவளை யின்புறப் பேற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விளைந்தன பெற்றார்
இப்புவி தன்னி லெண்ணி லருளரால்
அப்படி நீவிரு மவனையர்ச் சித்தால்

எப்பொருள் விரும்பினீ ரப்பொருள் பெறுவீர்
என்றுகன் றெறிந்தோ னெடுத்திவை யுரைப்ப
அன்றுமுற் றருமனு மனுசரு மிவனைப்
பூசனை புரித்து கட் புலனிலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிப ராகிச்
சிந்தையி னினைந்தவை செகத்தினிற் செயங்கொண்
டந்தமில் செல்வத் தரசியல் பெற்றார்
ஈங்கிது நிற்க விவ்விர தத்தியல்
ஓங்கிய காதைமற் றொன்றாரை செய்வோம்
கஞ்சநான் முகன்றருங் காசிபன் புணர்ந்த

வஞ்சக மனத்தாண் மாயைதன் வயிற்றிற்
சூரனென் றொருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி யனைத்தையு மழித்தே
சீருடைச் சுவர்க்கத் திரவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருந்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனு மமரரு முனிவரும்
நீயிரங் கெமக்கென நெடுங்கரங் கூப்பி
இரசத கிரியுறை யிறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைக ளுரைக்கச்

சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடிவேல் கரதலத் தேந்தும்
புதல்வனைத் தருவோம் போமி னீரென
அமரர் கோனுக் கரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடா தூடலும்
ஓடிய வானோ ரொருங்குடன் கூடிப்
பாகவன் றன்னைப் பரிவுட னழைத்துச்
சூரன் செய்யுந் துயர மெல்லாம்
ஊரர வணிந்தோற் குரையென வுரைப்பக்

காமனை யெரித்த கடவுளென் றஞ்சிப்
பாகவன் பயமுறப் பயமுனக் கேதென
உற்றிடுங் கரதலத் துன்னையே தரித்தான்
நெற்றியி னயனமு நீயே யாதலிற்
குற்ற மடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் றானுந்
தானுமச் சபையிற் றரிபா தேகி
எமையா ளுடைய வுமையா ளுடனே
அமையா வின்பத் தமர்ந்தினி திருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்

ஒள்ளிய மடந்தை யொதுங்கி நாணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
அறுமுகப் பிள்ளையை யவன்கையி லீதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீண்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்க்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்றுகை யேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்க வொண்ணாமற்
தரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையுந் தாங்கவொண் ணாமற்

பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ணார் வதனத் தாமரை யாறுங்
கண்ணா றிரண்டுங் கரமீ ராறுங்
தூணெனத் திரண்ட தோளீ ராறும்
மாணயி 'லாதி வான்படை யுங்கொண்
டறுமுகக் கடவுளங் கவதரித் திடலும்
மறுகிய வும்பர் மகிழ்ந்துடன் கூடி
அறுமீன் களைப்பா லளித்திரென் றனுப்ப
ஆங்கவர் முலையுண் டறுமுகன் றானும்
ஓங்கிய வளர்ச்சி யுற்றிடு நாளில்

விமலனு முமையும் விடையுகைத் தாறு
தலைமக னிருந்த சரவணத் தடைந்து
முருகலர் குழலுமை முலைப்பா லூட்ட
இருவரு மின்பா லெடுத்தெடுத் தணைத்துத்
தேவர்தம் படைக்குச் சேனாதிபதியெனக்
காவல்கொண் டளிக்கக் கதிர்முடி சூட்டி
அயின்வேன் முதற்பல வாயுதங் கொடுத்துத்
திசையெலாஞ் செல்லுந் தேருமொன் றுதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறு மவுணரை யொறுத்திடேன் றனுப்ப

இருளை பருகு மிரவியைப் போலத்
தகுவரென் றிவரைச் சமரிடை முருக்கிக்
குருகு பேர்பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற விந்திரன் மகளாந்
தேவ குஞ்சரியைத் திருமணம் புணர்ந்திட்
டமரர் கோனுக் கமருல களித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியி லமர்ந்தினி திருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்

டமரர் மாத ரனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை யிழந்தது கண்டே
அண்ட ரெல்லா மடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்தடி வணங்கி
மருமலர்க் கடம்பனெ் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டுநீ யம்பிகா பதியென
இமையவ ருரைப்ப விறையவன் றானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண் டேவினை கட்டறுத் தருளுஞ்
சேவலங் கொடியோன் றேசம் போகத்

திருந்திழை யுமையா ளருந்துய ரெய்தி
வருந்தி முன்னிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துத லொழிகுதி
அங்கையாற் சூதெறிந் தாடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமையம்
புற்றர வணிந்த புனிதனைக் காணவங்
குற்றனன் றிருமா லூழ்வினை வலியாற்
சக்கர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புட னாடச்

சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் றோற்ப
இன்பவா யிதழுமை யான்வென் றேனென
எம்பெருமானும் யான்வென்றேனென
ஒருவர்க் கொருவ ருத்தரம் பேசி
இருவருஞ் சாட்சிய மிவனைக் கேட்ப
மாமனை வதைத்த மான்முக நோக்கி
காமனை யெரித்தோன் கட்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றா னென்றுந்
தோற்ற நாயகன் வென்றா னென்றும்

ஒன்றிய பொய்க்கரி யுடனங் குரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரியங் குருத்து
நோக்கி யிருந்தும் நுவன்றிலை யுண்மை
வாக்கினி லொன்றாய் மனத்தி லொன்றாய்
மைக்கரி யுரித்தோன் வதன நோக்கிப்
பொய்க்கரி யுரைத்த புன்மையி னாலே
கனலென வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற் றிருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்

முளரிகள் பூத்த முகினிறத் துருப்போய்த்
துளவணி மருமகனுந் துணைவிழி யிழந்தே
ஆண்டரைக் கணத்தி லாயிரம் யோசனை
நீண்டபைப் பாந்த ணெட்டுட லெடுத்து
வளர்மருப் பொன்றுடை வள்ளல்வீற் றிருக்குங்
கிளர்சினை யாலின் கீழ்க்கிடந் தனனால்
திரிகடக் கரியின் றிருமுகக் கடவுளும்
வழிபடு மடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீ ழிருந்தான்
கம்பமா முகக் கடவுடன் பெருமையை

அம்புவி யோருக் கறிவிப் போமென
உம்ப ருலகத் தோரெழு கன்னியர்
தம்பநூ லேணியிற் றாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழு தேத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழிந்த பின்னாளில்
ஆர்த்தக லிங்கத் தணியிழை வாங்கி
இருபத் தோரிழை யின்புறக் கட்டி
ஒருபோ துண்டி யுண்டொரு மனமாய்
வேதத் தாதியம் பூமியி லெழுத்தும்
ஆதி விநாயகற் கான வெழுத்தும்

மூன்றெழுத் ததனால் மொழிந்த மந்திரமுந்
தேன்றருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினா றுபசா ரத்தால்
வரைமகண் மதலையை வழிபா டாற்றி
இருபது நாளு மிப்படி நோற்று
மற்றைநா ளைங்கர மாமுகன் பிறந்த
தற்றைநாட் சதயமு மாறாம் பக்கமுஞ்
சேருமத் தினத்திற் றெளிபுன லாடி
வாரண முகத்தோன் வதிபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக் கேற்றிக்

குலவுபொற் கலைகள் கொடுவிதா னித்து
மலர்பல தொடுத்திடு மாலைகள ணாற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சன மாட்டிப்
பொற்கலை நன்னூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரோடு
குருந்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழன் மகிழிரு வாட்சி

தாமரை முல்லை தழையவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்த ளாத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் லெருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி யறுகு
முத்தளைக் கூவிள முதலிய சாத்தித்
தூப தீபங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்ப மோதக மவலெள் ளுண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொழிக் கரும்பு
தேனுடன் சர்க்கரை செவ்விள நீரான்

பானறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலா திருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானுநோற் பேனென
ஆங்கவன் றனக்கும் வேண்டுவ தளித்துப்
பாங்கொடிவ் விரதம் பரிந்துநோற் பித்தார்
அண்டர்கநா யகனா மைங்கர னருளால்
விண்டுவும் பண்டுள வேடம் பெற்றே

உஞ்சைமா நகர்புகுந் துமையொடு விமலன்
கஞ்சநாண் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சின மிகுந்து விமலனை நோக்கி
யானிடு சாப நீக்கிய தேனென
மானெடுங் கண்ணி மணிக்கத வடைப்ப
இறையவ னிதற்குக் காரண மேதென
மறிகடற் றுயிலு மாயவ னுரைப்பான்
பிறைமருப் பொன்றுடைப் பிள்ளையான் னெறக்குத்
தந்தருள் புரிந்த தவப்பய னீதெனச்

சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி யடைத்த பொற்றாள் நீங்கச்
சாங்குமுன் னுரைத்த சக்கர பாணி
இக்கதை சொல்ல வக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புட னேற்றபின்
மாதுமை யடைத்த வன்றாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனு நகைத்தான்
நானோ வந்து நகையா னதுவெனத்
தேனேர் மொழியா டெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்

நின்மக னோன்பி னுறுதி யறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமி லரனை யாயிழை வணங்கிப்
பொருஞ்சூ ரறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருந்திநோற் போனென
இறையவன் கதைசொல் வேந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலோன் றொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுழுந் தாமத் தாமனை
மாதுமை யாளை வந்துகண் டனனே

கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாகெனத்
தண்ணறுங் குழலுமை சாபமிட் டதுவும்
அக்குநீ றணியு மரன்முதல லளித்த
விக்கின விநாயகன் விரதநோற் றதன்பின்
சுடர்க்கதை யேந்துந் துளவ மாலையன்
விடப்பணி யுருவம் விட்டுநீங் கியதும்
பவுரிகொள் கூத்துடைப் பரமனு நோற்றுக்
கவுரியன் றடைத்த கபாடந் திறந்ததும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்

பூநறுந் தருநிழற் புரந்தரன் முதலாம்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
ஆரண மலரோன் அந்நாட் பயந்த
நாரத முனிவ னவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னி லிவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் னோற்று
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
மடலவிழ் கமல மலர்த்திரு வனையாள்
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து

மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கழலுற வெள்ளியங் கைலையி லுற்றான்
பரிவொ டிவ்விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்ரமா தித்தன்
திறிகடக் கயமுகன் திருவரு ளதனால்
மறிகடற் புவிபெற வருந்திநோற் றிடுநாண்
மற்றவன் காதன் மடவர லொருத்தி
இற்றிடு மிடையா ளிலக்கண சுந்தரி
மெத்தவன் புடனிவ் விரதனோற் பேனென
அத்தந் தன்னி லணியிழை செறித்துச்

சிற்றிடை யாளுஞ் சிலநா ணோற்றபின்
உற்ற னோன்பி னுறுதி மறந்து
சுற்றிய விழையைத் தோகையும் வாங்கி
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்கது தழைத்தே யலருந் தளிருமாய்ப்
பாங்குற வோங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை யிருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி யொருத்தி
அவ்விய முல்லா ளவ்விடந் தன்னிற்
கொவ்வை யடகு கொய்வாள் குறுகி

இழையது கிடப்பக் கண்டவ ளெடுத்துக்
குழைதவழ் வரிவிழிக் கோதை கைக்கட்டி
அப்பமோ டடைகா யவைபல வைத்துச்
செப்ப முடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத் தண்ணல் கருணை கூர்ந்து
பண்டையி லிரட்டி பதமவட் கருளக்
கொண்டுபோ யரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமா தித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மான உடைமணி கட்டித்.
தண்டையுஞ் சிலம்புந் தாளினின் றொலிப்பக்

கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கு மன்னவன் றன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி யிம்மனை யிருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென வெழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ண லுரைத்திடு மவ்வழி தன்னில்
ஆனை குதிரை யவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு

இமைப்பொழு திவளிங் கிருக்கலாகாதென
அயற்கடை யவனு மகற்றிய பின்னர்
வணிகன் றனது மனைபுகுந் திருப்ப
மணியுமுத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை யவனு மகற்ற
உழவர் தம்மனையி லுற்றவ ளிருப்ப
வளர்பயி ரழிந்து வளம்பல குன்ற
அயன்மனை யவரு மகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கல முடைந்து கொள்ளை போக

அயற்கடை யவனு மகற்றிய பின்னர்த்
தூசுதூய் தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுக ளெல்லாந் துணிந்து வேறாகத்
தூசரு மவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞால மெல்லா நடுங்கவந் துதித்தாய்
சாலவும் பாவிநீ தான் யாரென்ன
வெம்மன மிகவு மேவி முனிவுறா
அம்மனை யவனு மகற்றிய பின்னர்

அவ்வை செல்ல அகங்க டோறும்
வைதன ரெறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் னகமதிற் சென்று
இவ்வகை கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண் டுலகு கருணையொ டாண்ட
மார்த்தாண்ட ராசன் மாமக ளாருத்தி
எல்லார்க்கு மூத்தா ளிலக்கண சுந்தரி
சொல்லுவிக் கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட விருந்த தெரிவையை நோக்கி

நீரது கொண்டு நிலமெழு கிடுகெனச்
சாணி யெடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் புழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மானேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி யெடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரைமெழுக்கிட்டு
மண்ணிய வீட்டின் மணிவிளக் கேற்றிப்
புத்தக மெடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்திநின் றாட

மெத்தவுண் நடுங்கி வீழ்ந்தவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே அகமதிற் சென்றி
புத்தகமெடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரிய மிதுவென
உத்தமி யவ்வை யுணர்ந்துமுன் னறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக னோன்புநோற் றிடுகெனக்
கரத்துமு வேழிழைக் காப்புக் கட்டி

அப்பமு மவலு மாம்பல பண்டமுஞ்
செப்பம் தாகத் திருமுன் வைத்தே
செவ்விய தூப தீபங் காட்டி
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகா விரதத்தை
வித்தக மாக விளங்கிழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற் றதனால்
வீற்பொலி நுதலாள் மிமகிழ்ந் திருப்ப
சக்கிர வாள சைநியத்தோடு
விக்ரமா தித்தன் வேட்டையிற் சென்று

வெவ்விய தாக மிகப்பெரி தாகி
அவ்வை தன்மனை அரசனு நணுகி
தெண்ணீர் வேட்டுச் சிலர்தமை யனுப்ப
உண்ணீர்க் கரகமு மொருபணி யாரமும்
கண்ணேர் இலக்கணை கையிற் கொடுக்க
பண்ணேர் மொழியாள் பார்த்திபற் குதவலும்
ஒப்பறு படையு முயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை யவைகளு முண்டுந்
தானது தொலையாத் தன்மையைக் கண்டே

எவ்வகை யாலும் இவள் நமக் காமென
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மௌவலங் குழலாண் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென் றரசர்க் குரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காணிது
குணமுடைய யிவளுன் குலமனை யாட்டி
நலத்தக வாக நங்கைதன் நாமம்
இலக்கண சுந்தரி யாமென வுரைப்ப
தீங்கற நல்மணஞ் செய்துதா வென்ன
ஆங்கவள் வதுவைசெய் தரசனுக் களித்தபின்

மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து
திங்கணேர் வெள்ளிச் சிவிகையி னேற்றிக்
கொண்டூர் புகுந்து கொற்ற வேந்தனும்
ஒண்டோடி யாரி லுயர்பத முதவினன்
சிந்துர நுதலார் சென்றடி பணியச்
சுந்தரி யிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

உ

ஓம் சரவணபவ

முருகன் துணை



தேவராஜ சுவாமிகள் அருளிய

# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினை போம்
துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலர் அருள்
கந்தர் சஷ்டி கவசந் தனை
அமர ரிடர் திரவமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

### குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ் செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்வென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக! வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா! வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரவண ரவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவ வீரா நமோநம
நிபவ சரவ நிறநிற நிறென
வசர ஹணபவ வருக! வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா! வருக!
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்,
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்,
கிலியும் சௌவும் கிளரொளி யையும்,
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்,
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்,
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக!
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்,
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்,
பன்னிரு கண்ணும், பவளச் செவ்வாயும்,
நன்நெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்,
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்,
ஆறிரு திண்புயத்(து) அழகிய மார்பில்
பல்பூ ஷணமும், பதக்கமும் தரித்து,
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்,
முப்புரி நூலும், முத்தணி மார்பும்,

செப்பழகுடைய திருவயிறு உந்தியும்,
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்,
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்,
இருதொடை யழகும், இணைமுழந் தாளும்,
திருவடியதனில் சிலம்பொலி முழங்க,
செககண, செககண, செககண, செககண,
மொகமொக, மொகமொக, மொகமொக, மொகநெண,
நகநக, நகநக, நகநக, நகென,
டிகுகுண, டிகுடிகு, டிகுகுண, டிகுண,
ரரரர, ரரரர, ரரரர, ரரர,
ரிரிரிரி, ரிரிரிரி, ரிரிரிரி, ரிரிரி,
டுடுடுடு, டுடுடுடு, டுடுடுடு, டுடுடு,
டகுடகு, டிகுடிகு, டங்கு, டிங்குகு,
விந்து, விந்து, மயிலோன் விந்து,
முந்து, முந்து, முருகவேல் முந்து,
என்றனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்,
லாலா, லாலா, லாலா வேசமும்,
லீலா, லீலா, லீலா விநோதனென்று,
உன் திருவடியை உறுதியென்றெண்ணும்,
என்தலை வைத்துன் இணையடி காக்க!
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!
அடியேன் வதனம் அழகுவேல் காக்க!
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க!
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க!
முப்பத் திருபல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க!
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க!
மார்பை இரத்தின வடிவேல் காக்க!
சேரிள முலைமார் திருவேல் காக்க!
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க!
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!
பழுபதி னாறும் பருவேல் காக்க!
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க!

நாணாங் கயிற்றை நல்வேல் காக்க!
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க!
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வல்வேல் காக்க!
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க!
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க!
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க!
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க,
நாவிற் சரஸ்வதி நற்றுணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க!
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க!
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க!
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க!
காக்க காக்க கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியில் நோக்க!
தாக்க தாக்க தடையறத் தாக்க!
பார்க்க, பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்,
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்,
பெண்களைத் தொடரும் பிரமரா ஷதரும்,
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட,
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும், இருட்டிலும், எதிர்ப்படும் அண்ணரும்,
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட,
ஆனை அடியினில் அரும்பாவைகளும்,
பூனை மயிரும், பிள்ளைகள் என்பும்,
நகமும், மயிரும், நீண்முடி மண்டையும்,
பாவைகளு டனே பலகல சத்துடன்

மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்,
ஒட்டியப் பாவையும், ஒட்டியச் செறுக்கும்,
காசும், பணமும், காவுடன் சோறும்,
ஓதுமஞ்சனமும், ஒருவழிப் போக்கும்,
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட,
மாற்றார், வஞ்சகர் வந்து வணங்கிட,
காலதூதாலெனைக் கண்டாற் கலங்கிட,
அஞ்சி நடுங்கிட, அரண்டு புரண்டிட,
வாய்விட்டலறி மதிகெட் டோடப்,
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டு உடனங்கம் கதறிடக் கட்டு,
கட்டி உருட்டு, கால்கை முறியக்,
கட்டு, கட்டு, கதறிடக் கட்டு,
முட்டு, முட்டு, விழிகள் பிதுங்கிட,
செக்கு, செக்கு, செதில் செதிலாக,
சொக்கு, சொக்கு, சூர்ப்பபகைச் சொக்கு,
குத்து, குத்து, கூர்வடிவேலால்,
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி, தணலெரி, தணலதுவாக
விடுவிடு வேலை, வெருண்டதுவோட
புலியும், நரியும் புன்னரி நாயும்,
எலியும், கரடியும், இனித் தொடா தோடத்
தேளும், பாம்பும், செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க,
ஒளிப்பும் சுளுக்கும், ஒருதலை நோயும்
வாதம், சயித்தியம், வலிப்புப் பித்தம்
சூலைசயங், குன்மம், சொக்குச் சிரங்கு,
குடைச்சல் சிலந்தி, குடலவிப் பிரிதி,
பக்கப் பிளவை, படர்தொடை வாழை,
கடுவன், படுவன், கைத்தாள் சிலந்தி,
பற்குத்து அரணை, பருவரை யாப்பும்,
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீஎனக் கருள்வாய்!
ஈரேழ் உலகமும் எனக்குற வாக!
ஆணும், பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்,
உன்னைத் துதிக்க, உன்திரு நாமம்
சரவண பவனே! சைலொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவமொழி பவனே!

அரிதிரு மருகா! அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்!
கந்தா! குகனே! கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா! கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகாசலனே! சங்கரன் புதல்வா!
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா!
பழனிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும்செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க, யானுனைப் பாட,
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தைமுருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன், நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன்யான் நெற்றியில் அணியப்
பாசவினைகள் பற்றது நீங்கி,
உன்பதம் பெறவே! உன்னருளாக,
அன்புடன் இரட்சி அன்னமுஞ், சொன்னமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க! வாழ்க! மயிலோன் வாழ்க!
வாழ்க! வாழ்க! வடிவேல் வாழ்க!
வாழ்க! வாழ்க! மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க! மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க! வாரணத் துவசம்
வாழ்க வாழ்க! என் வறுமைகள் நீங்க,
எத்தனை குறைகள்? எத்தனை பிழைகள்?
எத்தனை? அடியேன், எத்தனை? செயினும்,
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்,
பெற்றவள் குறமகள், பெற்றவ ளாமே!
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து,
மைந்தனென் மீது உன் மனம்மகிழ்ந்தருளித்,
தஞ்சமென்றடியார் தழைத்திட அருள்செய்,
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய,
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில், மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன், அங்கத் துலக்கி,
நேச முடன்ஒரு நினைவது வாகிக்,
கந்தர்சஷ்டிக் கவசம் இதனைச்

சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத்தாறுருக் கொண்டு
ஓதியே! செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலதருளுவர்!
மாற்றல, ரெல்லாம் வந்து வணங்குவர்,
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்,
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்,
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்,
கந்தர்கை வேலாம் கவசத்தடியை
வழியாய்க் காண, மெய்யாய் விளங்கும்,
விழியாற்காண, வெருண்டிடும் பேய்கள்,
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்,
நல்லோர் நினைவில் நடனம் புரியும்,
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அட்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்,
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த,
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத் தடுத்தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ! போற்றி!
தேவர்கள் சேனா பதியே! போற்றி!
குறமகள் மனமகிழ் கோனே! போற்றி!
திறமிகு திவ்விய தேகா! போற்றி!
இடும்பா யுதனே! இடும்பா! போற்றி!
கடம்பா! போற்றி! கந்தா! போற்றி!
வெட்சி புனையும் வேளே! போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்,
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

# சரஸ்பதி
## சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
    தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ
    சகமேழும் அளித்(து)
உண்டான் உறங்க ஒழித்தான்பித்
    தாகஉண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
    சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
    தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
    வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
    கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
    சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தேன்அமு(து)
    ஆர்ந்துன் அருட்கடலில்
குளிக்கும் படிக்(கு) என்றுகூடும்
    கொலோஉளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
    கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
    சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
    கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப்பணித்தருள்
    வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
    தொண்டர்செந் நாவில்நின்று
காக்கும் கருணைக் கடலே
    சகல கலாவல்லியே.

பஞ்சுஅப்பு இதம்தரு செய்யபொற்
பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்(து)அல ராத(து) என்
னேநெடுந் தாட்கமலத்(து)
அஞ்சத் துவசம் உயர்ந்தோன்செந்
நாவும்அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவி(சு) ஒத்(து) இருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழு(து) எளி(து) எய்தநல்
காய்எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளால்
பொருந்தும் பயனும்என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்
காய்உளங் கொண்டுதொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ஓதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமும் அவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந்து அடிமைகொள்
வாய்நளி னாசனம்சேர்
செல்விக்(கு) அரி(து) என்று ஒருகால
முஞ்சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ(டு)
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே.

# கழுகுமலைப் பத்து

கழுகுமலை தனிலுறையும் முருக வேலே
கருத்துடனே வுன்பாதமலர் தானே யோத
பழுதொன்றும் வாராமல் காக்க வேணும்
பச்சைமால் தன்மருகா பார்வதியின் மைந்தா
வழுவாமல் அடியேமுன் நிற்க வேணும்
வரும்பிழைகள் தனையகற்றி வளியச் செவ்வாய்த்
தெளிவாக வுன்பாதந் துதிப்பேனையா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே.

காடுதனில் வேங்கைமர மாகி நின்றாய்
கானவர்கள் கண்டுன்னைக் கடுவே கத்தால்
சாடிடவே மனதி லெண்ணிப் பரிசைகத்தி
தானெடுத்தார் தவிடுபொடி யாக்க வென்று
கூடிய குறவரெல்லா நிமித்தங் கண்டு
குமரவே லென்றெண்ணிக் குலைந்திட்டார்கள்
தேடியே வுன்பாதந் துதிப்பேனையா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே.

கிட்டாத பொருள்தனைப் போலென் னாளும்
கீர்த்தியுடனே இந்த புவியில் யானும்
எட்டியெட்டியே வுன்னை பார்க்கும் போது
ஏமாற்றி என்னை விட்டு யேகலாமோ
சட்டமுடன் தோகைமயில் மீதி லேறிக்
சடாட்சரமாய் என் முன்னே தோற்ற வேணும்
திட்டமுட னுன்பாதந் துதிப்பேனையா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே.

கீர்த்தியுடனே யிந்தப் புவியில் யானும்
கிருபையுட னுன்பதியே தேடி வாரேன்
பூத்தமலர் போலவுன்னை காண்ப தெப்போ
புண்ணியனே எனக்குவரம் தருவதெப்போ
வார்த்தையொன்று முரையாயோ வள்ளி வாழ்வே
வந்துனது சந்நிதியில் மன தன்பாகத்
தீர்த்தங்க ளாடிவுனைத் துதிப்பேனையா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே.

குவலயத்தில் அடியேன் யான் செய்த பாவம்
குற்றமெல்லாம் பொறுத்துனது குழந்தை போலக்
கவலையற்று வாழ்ந்திருக்கக் கருணை தந்து
காப்பதுவுன் செயலல்லோ கார்த்திகேயா
சவலையிளங் கன்றது தன் தாயைத் தேடி
தயங்கிகிறது போலயான் தயங்க லானேன்
சிவலைநிற மார்பழகா செந்தூர் கந்தா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே.

கூடியே மறலியென்னைப் பிடியா வண்ணம்
கொடுநரகிலே நானும் விழுந்தி டாமல்
வாடியே மனம் மெலிந்து போகா வண்ணம்
மாகவே வுன்னுடைய கீர்த்தி தந்து
பாடியே பவனொளி வபாய மென்றால்
பறக்குமோ பிசாசு முதல் ஏவல் தானும்
தேடியே வுன்பாதந் துதிப்பேனையா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே.

கெடுதியுள்ள சூரனை வதையே செய்தாய்க்
கிளிமொழியாள் வள்ளிதினப் புனத்திலேதான்
படிமீதில் தான் பெரிய பண்டாரம் போல்
பாசி பற்றிய பழுத்த கிழவனாகித்
தடியூன்றித் தண்டுக மண்டலமும் கொண்டு
சாட்டங்கமாய்க் குறவர்க் கெதிராக சென்றதாய்த்
தேடியே வுன்பாதந் துதிப்பேனையா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே.

கேசவானர் முருகோனே நீ செய் கோலம்
கொடிதான குமரகுரு வேடனாகி
நேசமுடன் கையி லம்புங் கொண்டு
நிமிசமுடன் வள்ளி தினப் புனத்திலே தான்
பாசமுடன் பெண்ணே கண்ணே யென்று
பண்புடைய வள்ளியை நீ பாகம் செய்தாய்
தேசமெல்லாந் திரிந்தலைந்தேன் உன்பாதங்காண சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே.

கையிலே சேவற் கொடியும் வேலும்
வள்ளி தெய்வ யானையுடன் மயில் மீதேறி
தைய நல்லாள் தீபதூபம் பிடிக்கத்
தாதியர்க ளிருபுறமுங் கவரி வீச
மெய்யுடனே ஆறுமுக ரூபமாகி
வேலவனே வந்தெனக்கு விடைகள் தாரும்
தெய் தெய் என்றுன் பாதந் துதிப்பேனையா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே.

கொன்றைமலர் வேணியனே உனக்குத் தானே
குழந்தையாய் வந்துதித்த குமரவேலே
அண்டரெல்லா முனைக்காண வேண்டி யிங்கே
அபயமென்று கையேந்தி அணுகி நிற்பார்
தண்டை கிங்கினிகாலில் சதங்கை கொஞ்சத்
தானோடி வந்துனது ஒளியைக் காட்டுந்
தெண்டனிட்டே னுன்பாதந் துதிப்பேனையா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே.

கோதையர்க ளிருபுறமுங் கவரி வீசக்
குளிராக மதிமுகங்க ளாறுந் துண்ணக்
காதலுடன் பன்னிருகை வேலுந் துண்ணக்
கானமயில் மீதேறும் கார்த்திகேயா
வாதுடனே சோதையன் செய் கிரகந்தன்னை
வடிவேலால் நீறு செய்த வானோர் கோவே
சீதைமரு கோனே உன் புகழைச் சொன்னேன் சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே.

கவ்விய பூதமெனைப் பிடியா வண்ணம்
காத்துனது கிருபை தந்து ரட்சியுமையா
வவ்விய மெய்மறந்து மொரு பசாசு தானும்
பவனொளி பவய மென்றால் பறக்குமே தான்
ஒவ்விய எனைச் சூழும் லாடன் மாடன்
ஓம்நம சிவாய மென்றால் ஓடிடாதோ
செவ்வையா யுன்பாதந் துதிப்பேனையா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே.

இக்கணமே இது நல்ல வேளையையா
இதோ பாரும் சந்நிதியில் திருவிழாவை
வணக்கமாய்க் கற்பூர மடவிளக்கு
வகை வகையாய்க் கன்னியர்க ளேந்துகிறார்கள்
ளெக்காளம் பேரிகை தம்பூர் மேளம்
இடியெனவே எத்திசையும் முழங்கி நிற்க
இக்கணமே வுன்பாதந் துதிப்பேனையா சுவாமி
தென் கதிரை முருகோனே தெரிசிப்பாயே.

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவி தாள்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலியோய்
வீதியாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல் நாம்
பேசும் போது எப்போது இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையும் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பால்யாம் ஆரேலோர் எம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாள் முன்வந்து எதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பரவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கு எலோர் எம்பாவாய்.

ஒள்நித்தில நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கு ஒருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்து உள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயில் ஏலோர் எம்பாவாய்.

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலுறு தேன்வாய்ப் படிநீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோநாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளை வந்து உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்கு உன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கு
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.

அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற்கு அரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய் திறப்பாய்
தென்னா என்னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுது என்று எல்லோரும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசு ஏலோர் எம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பு வெண்சங்கு எங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழிமுதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடேலோர் எம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன்சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்கே பாங்காவோம்
அன்னவரே எம் கணவராவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாவாய்ப் பணிசெய்வோ
இன்னவகையே எமக்கு எங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏது அவனைப் பாடும்பரிசு ஏலோர் எம்பாவாய்.

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து உன்கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யா வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமை ஏலோர் எம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் நற் தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வினைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல் மேல் வண்டார்ப்பப்
பூர்த்திகழும் பொய்கை குடைந்து உடையான் பொற்பாதம்
ஏந்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்த ஆடே ஏல் ஓர் எம்பாவாய்.

காதார் குழையாடப் பைப்பூண் கனனாடக்
கோதை குழலாடக் வண்டிங் குழாமாடச்
சீதப் புனவாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள் பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதம் திறம்பாடி ஆடேவோர் எம்பாவாய்.

ஓரொருகால் எப்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீர் ஒருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பளிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியார்
பேரையற்கு இங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.

முன் இக்கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழை ஏலோர் எம்பாவாய்.

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாதோர் இன்பம் நம்பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்தெம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடு ஏலோர் எம்பாவாய்.

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார் கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாகி அலியாய்ப் பிறங்கொளிர்சேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்து ஆடு ஏவோரெம்பாவாய்

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கு அப்பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்கே
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எம்கண் மற்றொன்றும் காணற்க
இங்கு இப்பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கு ஏலோர் எம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாமுய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோரெம்பாவாய்.

# திருப்பள்ளியெழுச்சி



திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரம ரண்ணல் அங் கண்ணாம்
திரள்நிலை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாம்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம் உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாயெங்கள் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழிந்திரு வுத்தரகோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொள்ளும் ஆறது கேட்போம்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தனை விரலியும் நீயும் நின் அடியார்
பழங்குடில் தோறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண் னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோகங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயஉல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குனின் றோம்அவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையு நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே

திருச்சிற்றம்பலம்

# மனிதன் மனிதனாக வாழ கடைப்பிடிக்க வேண்டியவை....

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!!

## உறவுள் மேம்பட........

குடும்பத்திலும் சரி அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க.....

**நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்**
**அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டே இருப்பதை விடுங்கள் (Loose Talks)**
**எந்த விஷயத்தையும் பிரச்சினையையும் நாசுக்காகக் கையாளுங்கள் (Diplomacy) விட்டுக் கொடுங்கள் (Compromise)**
**சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தானாக வேண்டும் என்று உணருங்கள் (Tolerance)**
**நீங்கள் சொன்னதே சரி என்று வாதாடாதீர்கள் (Adamant Argument) குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள் (Narrow Mindedenss)**
**உண்மை எது பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள் (Carrying Tales)**
**மற்றவர்களைவிட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள் (Superoriry Complex)**
**அளவுக்கதிகமாய் தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள் (Over Expectation)**
**எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும் அவர்களுக்குச் சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக்கொண்டிருக்காதீர்கள்.**
**கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பிவிடாதீர்கள்**
**அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்**
**உங்கள் கருத்துக்களில் உடும்புப்பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் (Flexibility)**
**மற்றவர் கருத்துக்களை செயல்களை. நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள் (Misunderstading)**
**மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும் இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள் (Coutesy)**
**புன்முறுவல் காட்டவும் சிற்சில அற்புதச் சொற்களைச் சொல்லவும்கூட நேரமில்லப்பததுபோல் நடந்துகொள்ளாதீர்கள்.**
**பேச்சிலும் நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும் தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்**
**அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்**
**பிரச்சினைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்கள் பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.**

## "மங்கலகரமாக வாழ வாழ்த்துகிறோம்"

**கலைப்பூக்கள் கலைக்கழகம்**
**அம்பிளாந்துறை.**



# கீதாசாரம்

- எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
- ...தோ. அது நன்றாகவே நடக்கிறது.
- ...துவும் நன்றாகவே நடக்கும்.
- ...ற்காக நீ அழுகிறாய்?
- ... இழப்பதற்கு.
- ... குவதற்கு.
- ...கிருந்தே எடுக்கப்பட்டது.
- ... டுக்கப்பட்டது.
- ...ற்றொவருடையதாகிறது.
- ...தம்.

JOTHI 2501

...ங்களப்பு.